T.7222

# திரிபுர சுந்தரி பிள்ளைத் தமிழ்

பதிப்பாளர்
**பி. மாலதி**

நெறியாளர்
**முனைவர் வீ. அரசு**
பேராசிரியர் – தலைவர்

**தமிழ் இலக்கியத்துறை**
**சென்னைப் பல்கலைக்கழகம்**
சென்னை - 600 005.
2011

# திரிபுர சுந்தரி பிள்ளைத் தமிழ்

## தாள் சுவடி

சுவடியியல் மற்றும் பதிப்பியல் நிறைசான்றிதழுக்காக
(Diploma) சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிவேடு

பதிப்பாளர்
**பி. மாலதி**

நெறியாளர்
**வீ. அரசு**
பேராசியர் - தலைவர்
தமிழ் இலக்கியத்துறை

**தமிழ் இலக்கியத் துறை**
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005

2011

**சுவடியியலும் பதிப்பியலும்** பட்டயச்
சான்றிதழுக்காகச் சென்னைப்பல்கலைக்
கழகத்திற்கு அளிக்கப்பெறும் பதிப்பேடு
**எண்:43011053**

பேராசிரியர் வீ. அரசு,
துறைத் தலைவர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை-600 005.

# நெறியாளர் சான்றிதழ்

'சுவடியியலும் பதிப்பியலும்' நிறைசான்றிதழுக்கான பதிப்பேட்டை செல்வி பி. மாலதி அவர்கள் என் மேற்பார்வையில் தாள் சுவடியிலிருந்து திரிபுர சுந்தரி பிள்ளைத் தமிழ் என்னும் பதிப்பேட்டை உருவாக்கியுள்ளார். இப்பதிப்பேடு அவரின் சொந்த முயற்சியில் உருவானது என்று சான்றளிக்கிறேன்.

நெறியாளர்,

(பேராசிரியர் வீ. அரசு)

நாள் :

இடம் : சென்னை-5

பி. மாலதி,
முதுகலைத் தமிழ்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை-600 005.

# பதிப்பாளர் உறுதிமொழி

'சுவடியியலும் பதிப்பியலும்' நிறைசான்றிதழுக்கான திரிபுர சுந்தரி பிள்ளைத் தமிழ் என்னும் தாள் சுவடி பதிப்பேடு என் சொந்த முயற்சியால் உருவானதாகும். இப்பதிப்பேடு இதற்குமுன் வேறு எந்த பட்டத்திற்கும், ஆய்வரங்கிற்கும் அளிக்கவில்லை என்று உறுதி அளிக்கிறேன்.

பதிப்பாளர்

**(பி. மாலதி)**

நாள் :

இடம் : சென்னை-5

# உள்ளடக்கம்

| | |
|---|---|
| நன்றியுரை | 11 |
| முகவுரை | 12 |
| திரிபுர சுந்தரி பிள்ளைத் தமிழ் | 17–61 |
| காப்புப் பருவம் | |
| செங்கீரைப் பருவம் | |
| தாலப் பருவம் | |
| சப்பாணிப் பருவம் | |
| முத்தப் பருவம் | |
| வாரானைப் பருவம் | |
| அம்புலிப் பருவம் | |
| சிற்றில் | |
| சிற்றில் இழைத்தல் | |
| நீராடல் | |
| பொன்னூசல் | |
| பின்னிணைப்பு | |
| பாயிரம் | 67 |
| செய்யுள் அகரவரிசை | 69 |

# நன்றியுரை

என்னை ஈன்றெடுத்த தாய் தந்தையரான பிச்சாண்டி திலகா-அவர்களுக்கும், எனது அறிவுக் கண்ணை திறந்து, பயில்வதற்கு வழிகாட்டியாக விளங்கிய இளங்கலை ஆசிரியை இரா. கீதா இரத்தின பிரியா அவர்களுக்கும், என் பிற ஆசிரியைகளான சத்தியாவதி, ஞானாம்பிகை அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையால் நடத்தப்பெறும் சுவடியியல் மற்றும் பதிப்பியல் என்னும் பட்டயப் படிப்பில் பயில்வதற்கு வாய்ப்பளித்தும், சுவடியோடு நேரடியாக வாசிக்கவும், எழுத்து முறைமைகளை கற்கவும் வழி வகுத்து, சுவடியை பதிப்பிக்கும் முறைமைகளையும் சுவடியைப் பதிப்பிப்பதற்கு வழிகாட்டியாக இருந்த மதிப்பிற்குரிய பேராசிரியர் வீ. அரசு அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவடி வகுப்பில் சுவடியோடு அணுகவும், எழுதவும், யாப்பு சம்பந்தமான ஐயங்களை தெளிவுபடுத்திய உதவி பேராசிரியர் ய. மணிகண்டன் அவர்களுக்கும், விருந்து நிலை விரிவுரையாளர் சி. இளங்கோ, லதா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தாள் சுவடியை பதிப்பிப்பதற்கு உரிமை வழங்கிய கீழ்த்திசை சுவடி நூலக பொறுப்பாளர் திரு. சௌந்தரப் பாண்டியன் அவர்களுக்கும் நன்றி.

பல நிலைகளிலும் உதவி புரிந்த முனைவர் பட்ட ஆய்வாளர் ப. திருஞானசம்பந்தம் மற்றும் வகுப்பு நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கனிவான முறையில் கணிப்பொறி வரைகலைகளையும் அச்சுப் பணியையும் சிறப்பான முறையில் பயன்படுத்தி நூலினை வடிவமைத்த திருமதி கௌசல்யா பிரகாஷ் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# முன்னுரை

தமிழ் இலக்கிய வகைமை நீண்ட நெடிய பாரம்பரியத்தைக் கொண்டதாக திகழ்கிறது. சங்க இலக்கியம், காப்பியம், பக்தி இலக்கியம், புராணம் என்னும் இலக்கிய வகையை அடுத்து சிறப்பு நிலையைப் பெற்று விளங்குவது பிரபந்தம் அல்லது சிற்றிலக்கிய வகைமையாகம். இவ்விலக்கிய வகைமைக்கான இலக்கணங்கள் தொல்காப்பிய முதலாக இருபதாம் நூற்றாண்டு வரை தோன்றியுள்ள இலக்கண நூல்கள் இலக்கணம் வகுத்துச் சென்றுள்ளன. இவ்விலக்கண நூல்களுள் பிள்ளைத் தமிழுக்கான இலக்கணங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. இப்பிள்ளைத்தமிழ் சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு என்ற வரையறையள் ஒன்றாக இடம்பெறுகின்றது. தமிழில் நமக்கு கிடைக்கக்கூடிய முதல் இலக்கண நூலான தொல்காப்பியம்,

**குழவி மருங்கினும் கிழவதாகும்** தொல்.புறம்.24

என பிள்ளைத் தமிழுக்கான இலக்கணத்தை வகுத்து செல்கின்றது.

சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு என்ற வரையறையை முதன் முதல் கி.பி. 16ஆம் நூற்றாண்டில் தோன்றிய வல்லவராயன் உலாவில் சுட்டப்பெறுகின்றது. இக்குறிப்பை டாக்டர் உ.வே. சாமிநாதையர் பிரபந்த மரபியல் பதிப்பிற்கு எழுதிய குறிப்பில் சுட்டுகின்றார் (மு. அருணாசலம் (பதிப்), பிரபந்த மரபியல், ப.7) இக்கருத்தையே தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரும் தெரிவிக்கின்றார்.

யாப்பு, அணி இலக்கணங்களுக்கு இலக்கணம் கூறும் நூல்களாக தோன்றியவை பாட்டியல் நூல்களாகும். இப்பாட்டியல் நூல்களுள் பிரபந்த தீபிகை, பிரபந்த திரட்டு முதலிய நூல்கள் சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு என்ற கருத்தை வலியுறுத்தி இலக்கணம் வகுத்துள்ளது. அதில் பிள்ளைத் தமிழுக்கான இலக்கணம் நவிலப்பட்டுள்ளது.

**பிள்ளைக்கவி முதல் ஹபராணம் ஈறாகத்**
**தொண்ணூற் றாறெனுந் தொகைய தான**

(பிரபந்த தீபிகை. நூற்பா.1)

பதினாறை யாறிற் பெருக்கு பிரபந்தாதி
பலவகை யெடுத்துரைக்கின் (பிரபந்த திரட்டு.நூற்பா.1)

என முறையே பிரபந்த தீபிகையும், பிரபந்த திரட்டும் பிள்ளைத் தமிழுக்கான இலக்கணத்தைச் சுட்டுகின்றன.

தொண்ணூற்றாறு எனும் வரையறையைத் தாண்டி முந்நூறுக்கும் மேற்பட்ட சிற்றிலக்கிய வகைமைகள் தமிழ் மொழியில் தோன்றியிருந்தாலும் இன்று மக்களிடையே பிள்ளைத்தமிழ், அந்தாதி, உலா, கலம்பகம், தூது, பரணி, ஆற்றுப்படை, குறவஞ்சி, பதிகம், சதகம், கோவை முதலிய சிற்றிலக்கிய வகைகளே அதிக செல்வாக்குப் பெற்று விளங்குகின்றன. இவற்றுள்ளும் தன் பெயரில் தமிழ் என்னும் சொல்லாட்சியை பெற்று விளங்கும் சிற்றிலக்கிய வகை பிள்ளைத்தமிழே ஆகும்.

பிள்ளைத்தமிழ் என்ற இலக்கிய வகைக்கு வெண்பாப் பாட்டியல், நவநீத பாட்டியல், சிதம்பர பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல், பிரபந்த மரபியல் முதலிய பாட்டியல் நூல்கள் பிள்ளைத் தமிழுக்கு முதன்மை இடத்தைத் தந்துள்ளன. பாட்டியல் நூல்களுள் மிக பழைமையான பாட்டியல் நூலான பன்னிரு பாட்டியல் 'மேதகு சாதகம் பிள்ளைப்பாட்டே' (நூற்பா 172) என இரண்டாம் இடத்தைப் பிள்ளைத் தமிழுக்கே இவ்வாறு இலக்கண நூல்கள் பிள்ளைத்தமிழ் என்ற இலக்கிய வகைமைக்கான இலக்கணத்தைச் சுட்டியுள்ளன.

### பிள்ளைத் தமிழுக்கான பொதுவிலக்கணம்

இலக்கண நூல்களுள் இலக்கணம் பெற்று முதன்மை இடத்தைப் பெற்று நிற்கும் பிள்ளைத் தமிழ் ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இருவகைப்படும். இப்பிள்ளைத் தமிழ் பத்து பருவங்களைக் கொண்டு பாடப்பெறும். அப்பருவங்களாவன காப்பு, செங்கீரை,தால், சப்பாணி, முத்தம், வரவு, அம்புலி, சிற்றில், சிறுதேர், சிறுபறை. இவற்றுள் ஆண்பாற் பிள்ளைத் தமிழ் பத்து பருவங்களைக் கொண்டு பாடப்பெறும். பெண்பாற் பிள்ளைத் தமிழ் ஆண்பால் பிளளைத் தமிழுக்குரிய முதல் ஏழு பருவங்களை முறையே கொண்டு இறுதியி உள்ள மூன்று பருவங்களுக்கப் பதிலாகச் சிற்றில் இழைத்தல், சிறு சோறாக்கல், குழமகன் ஊசல், காமவேள் நோன்பு முதலியவற்றுள் எவையேனும் மூன்றனைக் கொண்டு பாடப்பெறும். பெரும்பாலும் பெண்பாற் பிள்ளைத் தமிழ் நூல்களுள் கழங்கு, அம்மானை, ஊசல் ஆகிய மூன்று பருவங்களைக் கொண்டே பாடப்பெற்றிருக்கும். இங்கு பதிப்பிக்கப்பெறும் திரிபுர சுந்தரி பிள்ளைத் தமிழ் பெண்பாற் பிளைத் தமிழாகும். இது முறையே காப்பு, செங்கீரை, தால்,

சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், நீராடல், பொன்னூசல் எனப் பத்துப் பருவங்களைக் கொண்டு அமைந்துள்ளது. தனித்து சுட்டத்தக்கது.

ஒவ்வொரு பருவத்திற்க்கும் பத்து பத்து பாடல்கள் கொண்டு நூறு பாடல்களாகப் பாடப்பெற்றிருக்கும். இப்பிள்ளைத் தமிழிலக்கியங்கள் பெரும்பாலும் ஆசிரிய விருத்தத்தால் பாடப்பெறும். இங்கு பதிப்பிக்கப்பெறும் **திரிபுர சுந்தரி பிள்ளைத் தமிழ்** பதினான்கு சீர் ஆசிரிய விருத்தத்தாலும், பன்னிரு சீர் (இரட்டை ஆசிரியம்) ஆசிரியர் விருத்தத்தாலும் பாடப் பெற்றுள்ளது. இந்நூலுக்கு சிறப்பினை தருவதாகப் பலரால் இயற்றப்பெற்ற பாயிரம் அணி செய்கின்றது. இப்பாயிரங்கள் முறையே வெண்பா, ஆசிரிய விருத்தம், கலித்துறை முதலிய யாப்பால் பாடப்பெற்றுள்ளது இப்பாயிரங்கள் முறையே தாண்டவராயக் கவிராசர், இராமசந்திர கவிராயர், நயினியப்ப கவிராயர், வீராசாமி முதலியார், வெங்கடாசல முதலியார், சாம்பு சிவக் கவிராயர், கூனிபோகு இராமசாமி, அருணாசல உபாத்தியார், இராமானுசக் கவிராயர், வாலைதாசன் போன்றோரால் பாடப்பெற்றுள்ளது. இப்பதிப்பின் பின்னிணைப்பில் இப்பாயிரங்கள் தரப்பட்டுள்ளன. மேலும் இப்பிள்ளைத்தமிழ் நூலில் உள்ள பாடல்களின் முதற்குறிப்பு அகர நிரலில் அளிக்கப் பெற்றுள்ளது.

# கதைச் சுருக்கம்

*புதுவை திரிபுர சுந்தரி பிள்ளைத் தமிழ், இந்திரன் கௌதமர் மனைவியாகிய அகலிகையிடத்து ஆசையுற்றான். நடு இரவில் சேவலாகிக்கூகினான். அவர் குளிப்பதற்குச் சென்றார். அப்போது அவரைப்போல் உருவெடுத்துச் சென்று அவர் மனைவியுடன் புணர்ந்து முனிவரிடம் அகப்பட்டுஅநேக யோனிகள் தேகத்தில் உண்டாகவும் ஆண்குறி நீங்கவும் சாபம் பெற்றான். அந்த நாணத்தினால் தாமரைத் தண்டில் நெடுநாள் ஒளிந்திருந்தான். இந்திரன்இத்தலத்தில் பூசித்தால் அச்சாபம் நீங்கி வேதமும் பெற்றான்; பிரமன் இத்தலத்தில் மௌனமாக அட்டாங்க யோகங்களைப் பயின்று அந்தரங்கப் பூசை விதிகளைக் கற்றவன்; முன்னொரு நாளில் உருத்திராட்சம் அணிந்து இத்தலத்தை யடைந்த 'மேதாதி' என்பவன் மோட்சமடைந்தான்; இத்தலத்தை அடைந்த தசரதராமன் சிவனைக் குறித்து வழிபாடியற்றி பாசுபதமாகிய அம்பை நட்புத் தன்மையில் பெற்றது; சிவபெருமான் கண்களைப் பிராட்டியார் விநோதமாக மூடியபோது உண்டான அச்சத்தால் தேகத்தில் வேர்வை உண்டாயிற்று. அவ்வேர்வையானது இறைவன் நெற்றிக்கண்ணால் சூடுண்டு மூடிய விரலிலேயே ஒரு கர்ப்பம் உண்டாயிற்று. அவ்வகைக் கருவில் அசுர உருவமாக ஒருவன் கோரத்துடன் பிறந்தான். இவன் பிறவிக்குருடனாகத் தோன்றியதனால் அந்தகன் எனப் பெயருற்றான். இவன் இரண்யாக்கத்துக்குச் சிவபெருமானால் கொடுக்கப்பட்டுப் பிரம்மதேவரைக் குறித்துத் தவம் செய்து ஒருவராலும் செயிக்கப்படாத வன்மையும் கண்களும் பெற்றான். பின் பார்வதி தேவியைக் கண்டு மோகித்துச் சிவபெருமான் மீது யுத்தத்திற்கு வர அவரது சூலத்தால் குத்தப்பெற்று அச்சூலத்தின்மேல் பலநாள் உலர்ந்திருந்து சிவபெருமானைத் துதித்தால் கருணை பெற்றுச் சிவகணத்தவன் ஆயினதும் இத்தலத்திலேயே எனும் செய்திகளை அறிய முடிகின்றது.*

# திரிபுர சுந்தரி பிள்ளைத் தமிழ்

திருமரு வுதம்பிரான் றாழன்முக் கட்சிவன்
றெய்வத் தலங்க டோறுஞ்
சீர்கொள் பதிகம் பாடுசெயலி னாற்பெறுபொரு
டிரட்டி முத்தாற் றினிதிட

வருமை திகழா ரூர்க்குளத் தெதுபோன்மாத்
துனாத்தள விடும்வணி கனாவந்
தருள்செய் துவேதவன் மாமணக் குளமேவு
மைங்காப் பிள்ளை காப்பாம்

பெருமை மிகுமால வெள்விடைக் கலங்காரனைப்
பிரியா திருக்கு முமையைப்
பேசரிய பச்சைப் பசுங்கிளி யைஞானப்
பிராட்டியைச் சிவதா னியைத்

தருமறி றைசெல்வி யைத்திரிபுர சவுந்தரித்
தாயை மற்றொப்பின் மணியைத்
தமியேன் குறித்துப் புகன்றிடும் பிள்ளைத்
தமிழ்க்கவி தைமுற் றுதற்கே 1

நீர்கொண்ட வேணிப்பிரான் பவளமே னியோடு
நீலம ணிவடிவ மின்ன
நிழல்விரி கொபூங்கிர ணமாணிக் கநீள்சூட்டி
நித்தில வடங்க புகழச்

சீர்கொண்ட முறுவலிடை நிலவொழு கவின்னருட்
டேன்விழிக் குவளை பொழியத்
தன்புதுவை மருவுதி ரிபுரசவுந் தரியெனுந்
தேவியை யுவந்து காக்க

தார்கொண்ட பைந்துழாய் முடிமீ தணிந்துபஞ்
சாயுதங் கைதலத் திற்
றோங்கியம் பொருகம டந்தையை யுயர்ந்தனிற
சந்தத முநீங்கா மலவைத்

தேர்கொண்ட வெண்டீரைக் கமலிடை யந்தன்மீ
தினிதா கவறிது யிலமாந்
திலகுபல்லா யிரக்கொடி யண்டங் கனுமின்
புறக்காக் குமுகிலே 2

வானவர்பார் வுபுருகூ தநெடுநாண் முயலுமாத
வமுனாவக லுமறையைக் கொடுத்தவர்
வாசமலரா னமுறைவழா துவழிபாடு பாடுவார்சிலை
கொடா சாதிபெயரைத் தரித்தவர்

மீனமுயர்கே தளமனே பவனதாக நுதன்மேலுறு
கணாழ லினெரியச் சினத்தவர்
வேதவனமா னதலநீடெ ழிலசெய் கோயிலுறை
வேதபுரிநா தாபதமித யத்திருத்தது

ஞானநிறை மோனசிவ யோகநெறி யோர்மனிதி
னாடோறுமு வாவுமிருந ளினப்பத்தியை
நாவினியன் மேவுதமிழ் மாறன்மக ளாயநாடிய
பிடேக் முறுமகுடச் சிரத்தியை

மானமயிலூ ருமுருகேசனோ டுகாழிவரு மாமதலை
தானுக ருமமுதத் தனத்தியை
மாசிலடியார் வினைகடிரவா மேயுதஸ் வாமியபிரா
மீதிரி புரையைப் புரக்கவே 3

தாரணி தனிலெதிர் மகிடநெ டுந்தலை
சாடியதா ணிமலி
தாயென் வனுதின மனமுரு கன்பாச
காயித யாவதனி

யாரனைவன் முறை திரிபுர சுந்தரியா
யிவரா கிபரை
யாரியையு மதனை யினிது புரிந்திட
வாசிலவியா தாமொழி

பாரது மலாமிளச யெழுதி விளங்கொரு
பாரியை கோருமுயர
பானுவி னொளிகெ டவேயில விரியங்
குசபாசமும் வாளவுண்

வீரரு முதுகிட வடுதிற லுங்கட
மீறுக யான்னமு
மேவுற நிலைபெறு சினகா நின்றருள
வேதலி விநாயகனே! 4

மகபதி பெறுந்தநய னோடுவினோ குறுபாரவன்
சிறை தீர்த்தருள சேவேள
வரியளி முரன்று பயினறிய தேமலாநீ
மஞ்சரித் தொடகு ழகநீள்

ககனமுல வஞ்சிறகினே கினவாகன முருகன்
சனைத் தாக்கி முனிசேய
கலைஞர் தமிழ்கொண்டு புகழபுதுவை மாநகரமே
வுகந்தனைப் போற்று துமரோ

பகாரிய தண்டை மணியரவ மொலிடுபாத
பங்கயப் பாரப்பதி மனோ
பவனயைடு சங்கானை நிதமுமெய் கல்லாத
பண்புடைப் பாக்கிய நலாள்

செகமுதவு நங்கையரு யுனிழந்த சூரி
செங்கை யுட்டாரக் கிளியினா
டீரிபுர சவுந்தர மினெனுனோன் மணிசீர்
திகழ்ந்திடக் காத்த ருளகவே 5

மேனிலத் தமரர்முனி வராபாவு கலைமகளை
மேன்மை யுடனாவின் வைத்து
மேதினி முதற்புவனம் யாவுமெவ் வுயிர்க்கும்
விழைந்தா தியிற்ப டைத்துத்

தேனிருஞ் சிறையளிய ருந்திமகிழ தெய்வச்
செழுங்கம லமீறி ருக்குந்
திசைமுகக் கடவுளிரு பதுமலரை யனுதினஞ்
செங்கை கூப்பிப் பணிகுவாம்

வேனிலாதிப மாரனாயு தச்சாலை யின்விளங்கு
தண்தும் பொழில்களும்
வெண்சங்கு யிர்த்தமுத் தின்நிலவிளாம் பலிதழ
விரியுநீர்ச் செந்நல் வயலும்

பானிற் ததூவிய தாவும்மலா வாவியும்பல
வளங்களூ நிறைந்து
பாங்கா சூழ்புதுவை வருதிரு புகாம்பிகை
யெனும்பர தேவியைக் காக்கவே 6

விண்டலஞ் செவிடுற வொலித்தி டும்வீர
வெண்டையித் தாளினான்
வேதனோண் சிரக்கல மிலங்கி டமேவு
தாமரைக் கையினான்

திண்டீற் றபெரும் பகைஞ்ஞருட் கிடச்சினவு
ஞோறிவெரு சேனையான்
செந்தமிழ்க் குரியரனை வயிர்வத் தேவனைப்
பணிந்தேத் துவாம்

மண்டலந் தனையவா வியுண்டருண மானுடன்
வருந்தொ கையை
வண்மை செருமுப்பானி ரண்டறம் வளர்த்
திடும்பர தேவியை

யெண்டீ சைக்கணின் றடீயர் போற்றிடும்
சனின்புரு வாமியை
யெழின்மிகும் புதுவை யிலுறைந் திடுமெம்
பிராட்டி யைக்காக்கவே 7

நதிபதிகள திமகிமை நிறையவைபார்க் கடளடுவுள
முதமோனை டுபுவனமு கிழபோற் றிமைய்
நடைகொள்மார் தமையாசு திருவுறப் பார்த்தெழின
பைகுமணிவண் ணமைருவி யுலகினைக் காத்துமுன்

கதியையடி யவர்கள்பெறு நன்முறைய ருட்காட்டி
யென்கணினு மிரதிபதி தனையுமிக ரெனப்பூத்துநன்
கவிதைமல ரையரிதன துபுயமதிற் சூட்டிமேனிகன
கமுளரிமிசை யுறையும யிலினைப் போற்றுது

மதியினளி செயொளிரவ தின்றிமலியைப் பாட்டளிவதி
யுமலரீன றைகமபூள மளகியைத் தீட்டரு
மறைகளபுக ழய்யகமல காணியைப்போர்க் கெதிர்மகிட
னெடுமுடியை யிடறுசமறி யைச்செட்போலி

போதியமுனி தமிழினிசை கொள்கௌரி யைப்பூத்தி
கழ்பொருவில் பயமொடு காதகாமினைச் சிற்றமில்
புனிதமுறுப் தவருமேவரு மினிதுளத்தேத் தியபுதுவை
யமலனிட நிலவுகு யிலினைக் காட்கவே! 8

துதியரான திலங்குகலை மகளெனப் யெஞ்கொண்டு
துய்படிகமா லைவீணை
சுருதிநூற் புத்தகங்கர மேந்தியென் கொண்டுணங்கு
மொருவனை மணந்து

விதியாமலங் கறுணர பாவாணந் நாவினவர
மேன்மைபெற வேநடிக்கும்
வெண்கம லநாயகி மணிச்சிலம் பணியாற்
மென்மலரை முடிதரிப்பர

மதியாத பன்காலை மாலையெனு மிருபோது
மாறாது வந்துவந்து
மரவளங் காணில்பொண் மீதுலவு முயல்வரிசை
மன்னுபுது வாபுரிதனி

னதியார்து கொன்றை முடிவிளங் சியவுளநயந்
துவருளா காண்பா
னண்ணியெண் ணான்கற மோடுயிர பலவளர்க்குமொ
ருநங்கையைக் காக்கவன்றே 9

மறைவில்வே லாழிபடை வாள்வச்சி ரஞ்சூலவண்
படைதரித் தன்மவிடை
மயிலகருடன் சிங்கம்யா னைபேயி வைப்பூர்ந்து
வருபிராமணி கருணைகொண்

டுறுமைதீயச் சுவரிகௌ மாநிநாரா யணிவராகி
யிந்திராணி விசய
மோங்குகங் காளியென்று ரைத்த மாதாக்கறு
மையதானைப் பணிகுவாம்

சுறவமெறி திரையகடு கிழியவருனீந் துளங்கி
டும்பெண்ணை கதியும்
து, பமாத்வர முனிவர் செயுமகச் சூழலுஞ்சு
ராலயங்கள் பலவு

றியபூம் பொழில்களும் வயல்விளங்க ளுமலக
நன்மைதிகழ் தொண்டை நாட்டி
னுவுமிகும் புதுவையுறை திரிபுராம் பிகையென்
னுநங்கை யைக்காக் கவன்றே 10

நன்மை திகழெல்லை மாகாளி பத்திரகாளி
நாட்ருங் காடுகாளி
நவசத்தி பஞ்சத்தி களோடு பராசத்தி
நாமமுறு தீர்த்த சத்தி

வன்மை மிகுசிவ பூதகணா வீரபத்திரா
வயங்கொளரி கர்புத்திரா
மரதீர்த்தலை வாமதியர திித்தருட னுருத்திரா
மருத்துவாங் சுக்கள்

தன்மநெறி சேர்பெருந் தொகையமா ராமகளிர்
தண்டீசர நதீச்சங்ரா
சரணபங் கய்மலரை மலன்பினொடு சந்தமும்
வந்தனை செய்வோம்

பொன்மதிற் சிகாகோ புரமிலங் கிடுவேத
புரமேவுசி வனிடப்பாற்
பொருந்து திரிபுரசவுந் தரவல்லி யுமையைப்
புறங்கழுத்து நிற்கவன்றே 11

## செங்கீரை பருவம்

பைவைத்த மணிமுடி களோரா யிரங்கொண்டு
பரந்த ளரசேர்ந்து புவனப்
பல்லுயிர் களுந்தழைத் தோங்கியெஞ் ஞான்றுமே
பண்பினோ டுதலை யெடுக்க

மெய்வைத்த வேதனண் டங்களைச் சிட்டிக்கு
மேன்மை யோடுதலை யெடுக்க
விரிதிரைக் கடல்வண்ண வீற்றினைக் காத்தருளும்
வெற்றி யோடுதலை யெடுக்க

கைவைத்த மானமதுப் படையாள்ளி வைகண்டு
காதலோ டுதலை யெடுக்கக்
கருணையோ டுமெள்ளக் கவித் கவிழ்ந்து குகையூன்றி
மென்கம லமுகமே றெடுத்துத்

தெய்வத் தமிழ்ப்புலவர் போற்று தருமச்செல்வி
செங்கீரை யாடி யருளே
தென்புது வைமருவு திரிபுர சவுந்தரிவல்லி
செங்கீரை யாடி யருளே செங்கீரை 1

துங்கமிகு செம்மணி பதித்தபொற் பந்திலகு
சூழியக் கொண்டை யாடச்
சோடசகலா மதினொளிர வச்சிரச் சுட்டிச்
சுந்தர நுதர் கணாடப்

பைங்கதி ரெறிக்குமர கதமணித் தொங்கலிருட்
பார்வை யுறுசெ விநாடப்
பன்கை விரத்தினக் கடககே யூரமென்
பாணியில் விளங்கி யாடப்

பொங்குதண் சுடருமிபூ முதத்தார் மார்பிற்
புரண்ட சைந்தொலி செய்தாடப்
பொற்பிலகு சிற்றடியின் மொய்த்துகிண கிணிநூபுரந்
துண்டை கொஞ்சி யாடச்
செங்கமல வல்லிகலை வல்லிதுதி மலைவல்லி
செங்கீரை யாடி யருளே
தென்புது வைமருவு திரிபுரசவுந் தரவல்லி
செங்கீரை யாடி யருளே 2

வல்விற்றடக் கைவிராதிரு மின்னலகு
வய்வாள் விடாம றவரும்
வண்கொல்ல னுலையிசிவந் துதோயந் திலைகொணெடு
வடிவெற் படைத்த லைவரும்

வேல்வகை யறிந்துப சாயமுன் பாயபுரவி
மீதோங் குவிற லாளரும்
வெஞ்சம ருழக்குமும் மதமீறு குரங்கொட்டு
வெற்றி யானைப் படைஞருஞ்

சொல்வயம் பெறுமேக மண்டலந் தாவியுயர்
சுடரம ணித்தே ராளருஞ்
சூழமன்னர் மந்திரி பிரதானிமு தலாயாவருந்
தொழுது நின்னேவல் கேட்பச்

செல்வத்தமிழ்ப் பாணம் நாடாள் வருநங்கை
செங்கீரை யாடி யருளே
தென்புது வைமருவு திரிபுரசவுந் தரவல்லி
செங்கீரை யாடி யருளே 3

தண்டாள மணியுயர்த் திடுமிப் பியாயிரந்
தாள்சூ ழவீற் றிருக்குந்
தகைசே ரிடம்புரிச் சங்கமச் சங்கஞ்
சகச்சிரஞ் சூழ வரசு

கொண்டிடை யிருக்கும் வலம்புரிச் சங்கமது
கூறுமுன் றோகை சூழதாக்
கொற்றமொ டிருக்குஞ் சலஞ்சலச் சங்கம்
கூட்டங்கள் சூழ நாப்பண்

வெண்டிங் களோவெனும் பாஞ்ச்சன் னியச்சங்க
மேவிய தனிச்சி றந்த
மெல்லியர்கள் சதகோடி புடைசூழ நடுவினிது
வீற்றிருந் தருள கௌரியே

தெண்டிரைக் கடலுலகி னெவ்வுயிரு மோங்கநீ
செங்கீரை யாடி யருளே
தென்புது வைமருவு திரிபுரசவுந் தரவல்லி
செங்கீரை யாடி யருளே 4

நான்குதிக் குந்தலை திரும்பவொன் றொன்றாக
நாட்டியம் பகலைத்தரும்
ஞாயறுகு டைக்கினிலு மதிவடக்க தனிலு
நயந்துதித் தெழுவகுத்து

மீன்குதிக் குஞ்சத்த சாகரமு நிலைவிட்டு
வெவ்வேற தரமாற்றிய
மேருவைப் பம்பரமதாச் சுழற்றியு மெட்டு
வெற்புமிட மறவிதித்து

மூன்குதிக் கும்வச்சிரப் படையன்னி மோடுருத்தை
தெதிர்த்துப் பொருதபோ
தொருநொடி யிலாங்கவனை மாயத்தெழுப் பியமுவதை
யுற்றதிருவிளை யாடல்செய்

தென்குதிக் குங்கடம் பனையருள பசுங்குழவி
செங்கீரை யாடியருளே
தென்புது வைமருவு திரிபுரிசவுந் தரவல்லி
செங்கீரை யாடியருளே 5

நவமிக தெண்பனி மலையுத வுந்தனி
நங்காய கங்காணி
நதிபதி தநதிடு மமுதினு மின்சொன
லங்கூ ருந்தேவி

தவமுறு மந்தணர் துதியை மகிழ்ந்தகுடந்
தோய செந்தேனே
தளையவி ழுசண்பக மகிழ்தள் வங்கமழ
தண்டரா வண்டோதி

பவமக லுண்டிய வாடும் பிபெண்
பார்வண பாவை
பண்மணி யொண்டோ டிவிரல ணிசங்கெறி
பந்தாரும் பாணி

சிவபர மன்றன் திடமுறு மம்பிகை
செங்கோ செங்கீரை
செகமுழு துந்தெகு திரிபுர சுந்தரி
செங்கோ செங்கீரை 6

கனகொலை வஞ்சகா வெருவுறு சங்கரி
கண்பா ரென்றேநின்
கமலப தங்கரு துவாமுன் வரும்பரை
கண்டோ பண்பாடு

மனமுறு பண்டிதர் புகபூ நிரந்தரி
வண்கா வொண்கூடல்
வழுதிசெ யுந்தவ மருவது ரந்தரி
மனபார் கொண்டாடு

மனநடை யிந்திரை கலைமகள் கங்கை
யகங்கூ ரளபாகீ
யனுதின மும்பணி செய்மகி ழும்பிகை
யஞ்சீர் குன்றாத

தினகர னென்றிய னமணிதி கழுகுண்டலி
செங்கோ செங்கீரை
செகமுறு துந்தரு திருபுர சுந்தரி
செங்கோ செங்கீரை 7

மருவகு ளந்தந் தறவஞ் செபூமக
தாரஞ் சாதி
வழைகம பூசண்பக மல்ரிபு ருண்டீ
மனங்கால் செங்கோடு

குருகுசெ வந்திம தலையலாஞ்சனி
கொந்தார மஞ்சாடி
குழையோ ளிரங்கும் மவிலை குருஞ்தோடு
கொங்கார சிந்தூரம்

விரவியந் தனவவன் முடனும் புயமென்
றாதொண் போது
விரிகுமு தந்திக ழுதடம ருந்தரு
விஞ்சரெஞ் சர்துத

திருவள மொன்றிய புதுவை வரும்பரை
செங்கோ செங்கீரை
சகமுபூ துந்தரு திருபுர சுந்தரி
செங்கோ செங்கீரை 8

மெலிமை யோர்கள் பாரவி யவாமனர்
வீறுபாந் தாமர்
வேணுவை நாதமோ டுதுசே வாயிலர்
வீடுதவுந் தேவர்

காலிபி னாயா சிறாருட னேகினா
காரபுரை யுந்தேகர்
காமனை வேதனை யேயருள் சீதார்
கானுல வந்தாளர்

வாலிப னோனுர வாகுமி ராகவா
வானவை குந்தேசர்
மாபது காதன மாதுறை மார்பினர்
மாமணி யொண்பூணர்

ஆலிலை மீதுறை மாயவ தோதரி
யாடுக செங்கீரை
யாயபு கன்சேர் புதுவா புரீநாயகி
யாடுக செங்கீரை 9

வேதியர் மாமுனி வோர்கள் செய்மாத
வவேள்வி முடிந்தேற்
வீறுட னேதுதி தேவர்கள் பூசை
விழாநித முண்டாக

வொதவரு மேல்வர் நூனெறி நீதியு
லாவுதி நள்கூர்
வோதிம நேர்நடை யாகநி ரையான
மிகுமேநகை நலஞ்சார

மாதிக மாகிரி தேர்படை வீரர்
வழாவீ யந்தாவ
மாநில மீதற நீடழ காகவி
வாணா குலந்தேற

வாதிம னோன்மணி யேபரை யேயினி
யாடுக செங்கீரை
யாயபு கழ்சேர் புதுவா புரீநாயகி
யாடுக செங்கீரை 10

# தாலப் பருவம்

இலைகொண றும்பூந்தில் நேயகொண் டெழிவார்
தளையுச் சியிலிட்டே
யினியமண் மஞ்சட்பொடி யுமிளம் பச்சகு
முரத்தி மிர்ந்து

நிலைசெய் தெய்வக்கங் கைநன் னின்நிரை
பொற்கும்ப முகந்தாட்டி
நிலவினொ ளிர்பூந்துகி லதனானி ரம்புலா
மெய்து வட்டிச்

சிலையொண் ணுதலிற் காப்பணிந்து திருக்கண்
மலர்க்கஞ் சனந்தீட்டிச்
செம்பட் டணிவேயந் தயினிநீர் சிறக்கச்
சுழத்திய மயமலைத்

தலைவன் மனைவி சீராட்டுஞ் சத்தி
தாலோ தாலேலோ
தாயே புதுவைத் திரிபுர சுந்தரியே
தாலோ தாலேலோ

பழைய வேதங்கா லாகப் பகராகம்
மேற்பா ரப்பாகப்
பதினெண் புராணங் கொடுங்கை யதாப்பலவாங்
கலை கல்வி மாதா

வழுவிறத் துவங்கயி ராமருவு ஞான
மெல்ல னையா
வலைபே ரின்பத்தொட் டின்மிசை வளருங்
கருணைப் பசுந்திருவே

முழுமைய் யன்பிற் சிவபூ சைமுயலு
மிடையிற்மிக மகம்பைந்தி
முடுகக்கண் குட்கலங் காதுமுத யவன்றன்னீ
வளைக் கையுற்தீ

தழுவிக்கு ரிவைத்திடுப் கும்பத் தனத்தாய்
தாலோ தாலேலோ
தாயே புதுவைத் திரிபுர சுந்தரியே
தாலோ தாலேலோ 2

வண்ணங் கரியமா லையனு மறையுந்
தேடற் கரியவனா
வயக்கு திருநீற ளியூத்த ெ'ன்னி
வடிவாங் கயிலாய

சொண்ணந் திகழுமீன் வலையனா விடையிரக்
கச்சை யேரடுசுரிகை
யிசையக் கட்டிநே யதலனிந் தினிதா
வந்துநந் தியேனுந்

திண்ணம் பெருநீள் கொடுஞ்சுற வைத்தியங்
கவலைக்குட் படுத்தித்தெண்
டீரையா மனைக்கு ளுன்னை மணஞ்செய்ய
வளரமெய் யன்புமிகுந்

தண்ணிந் துறைவன் றங்த்தில வதரித்தாய்
தாலோ தாலேலோ
தாயே புதுவைத் திரிபுர சுந்தரியே
தாலோ தாலேலோ 3

பந்தபா சத்தொட ஏறுத்த படிவா
செயுந்ற்ற வம்பேறே
பரிந்துன் றிருப்பா தம்பணிவோர் பழநோய
கோடைக்காலப் பொழிலே

யெந்தநா ளுந்தெனிப் போரித யகமலத்
துறை தேனே
யினியபு கழைப்பா டும்வரிடா ரமிருணீ
தீதரு ளொளியே

சிந்தை யுறப்பூசை தனனபுரிவோர் சென்மக்
கடலிற்கே ழிற்புனையே
தேறுமெய்ஞ் ஞானச் செல்வா சேரு
முத்திக் கொருவதியே

தந்தனோ டுகந்தனை யளித்த சத்தி
தாலோ தாலேலோ
தாயே புதுவைத் திரிபுர சுந்தரியே
தாலோ தாலேலோ 4

மஞ்சக மிகுகளி கொண்டுல மரகா வூடே
மண்டிய பலபல வினகனி வழிதே றாறாயே
விஞ்சல வுபநா கைகண் டிடுநெறிகால் வாயோடா
மினகதி ருறுசே நெலம்பணை தனினீ ரேபோலபா

யெஞ்சலில் புதியவ ளந்தரு மெழின்மா றாநீளசீ
ரென்றுநி றைபுது வைவந் தருணமயிலே மேலாறோ
ரஞ்சலி செய்மகி பூஞ்சிவ பரையே தாலேலோ
அந்தரி திரிபுர சுந்தரி யுமையே தாலேலோ 5

மண்டிய கவள்கடி யுங்கடை சியாவா யமர
மங்கள நிறைகுமு தர்திக ழுவிழ்து நீருடே
கண்டிடு கருநெய் தலென்றெணி யளிகோட் கோடி
கஞ்சவ தன்முற வந்தல மாலா ளாதே

யொண்டிரு விரல்கொடை நிந்திட வுமமவா வோடேதே
னுண்டிட மறாதரு நந்தலி லவயல பாலசூ ழசீரே
யண்டியு புதுவை யமாந்தருன் குயிலே தாலேலோ
அந்தரி திரிபுர சுந்தரி யுமையே தாலேலோ 6

பூவணி புபூகுச வாதொடு கல்வைகடா னோபால
பொங்கொளி பொலணணி கண்டிகை நகுகாழிதா னோபால
தீவுக ளுகலமெ வெருப லபொருபர் னோபார்
செம்பொனு மிரசித முங்குல வுகுவா னோபாலா

மாவய மதகரி வாகன முதலியதா னோபால
மங்கள முடனிறை யும்பல வளமே நீளசீரர்
ராவண முதுவா புரிவள ஏகொடி தாலேலோ
அந்தரி திரிபுரி சுந்தரி யுமையே தாலேலோ 7

தளவத் தினமுகை யெணவொத் தகுறையா ரமானே
சந்தமி றையவா பங்கினு னிதொவாழ் மாதே
முளரிக் கண்ணொடு வருமுத் தமிகா பாலி
மொய்ம்புட னெதிர்மகி டனற்றில முவேகா யசூலி

யுளமிக் களியொடு னளினப் பதமற வாதார்பா
லும்பரு லகசுக மிம்பா பெறவருள்செய் மாதாவே
யளைகைக் குவமை சொல்புது வைத்தலைம தாலேலோ
அந்தரி திரிபுர சுந்தரி யுமையே தாலேலோ 8

மணிமுடி யரசர் கணிதம னுமுறை தவறாகாமே
மண்டல மூதரு மங்களி லனிபாழா போகாமே
துணிவொடு புலவர் கள்கலை பயிலறிவது மாறாமே
தொண்டர் கெண்முன் நமன்வந் தடலுடனே சீறாமே

பணிவுறு தகுதியர் தமதுர வனுதின போவாமே
பண்புயர் சிவசம யமாற்நெறி யேதா வாமே
அணிநல னெறிமிகு புதுவையில் வளர்கிளி தாலேலோ
சுந்தரி திரிபுர சுந்தரி யுமையே தாலேலோ 9

பூமங் கையும் பாரம களுமிரு
புரநின்றகொள் வடம்பற்றப்
புகலவ ரியதிரு நாமம் புகழ்ந்து
கலைமா திசைபாட

நெமங்கெடு தெய்வக் கங்கை
நிழலகா செய்வதாது
நிகரில் கவரிச் சியெந்த நிருத்தம்
புரியவரம் பையாக

ஊமங்கொளு மாதவம் பாரினி நிதேசுப
மங்களங் கூற
வெழின்மா ணிக்கத் தொட்டிலில் வீற்றிருக்கும்
பரையே பரிமளப்பூந்

தாமங்கம ழுநனுமலரக் முந்தளத் தாய
தாலோ தாலேலோ
தாயே புதுவைத் திரிபுர சுந்தரியே
தாலோ தாலேலோ 10

## சப்பாணிப் பருவம்

வெண்டாமரைச் செல்வியோ டுகழுங்கம் மனைகள்
விளையா டுசெங் கையினாற்
வீறுற்றமுத் தேவருக்கு முத்தொழில் காட்டி
மேன்மை தருசெங் கையினாற்

றொண்டான வாக்கதிக பாக்கிய முவந்தரு
ளகூட கச்செங் கையினாற்
சோதி வெயில்விரி மூவிலைச் சூலமேந்
துமிகுசுந் தரச்செங் கையினாற்

பண்டா வுமென்மொ ழிமிழற்று பைங்கிளி
குலவுபண் புற்றசெங் கையினாற்
பச்சை மயில்வா கனக்கடவுளை யெடுத்தருமை
பாராட் டுசெங் கைவினாற்

றண்டாது கமழகாந் துளொத்து செங்கையினாற்
சப்பாணி கொட்டி யருளே
சதுர்வேத மைத்தலை விபுதுவா புரிக்கிறைவி
சப்பாணி கொட்டி யருளே 1

அங்கணு லகோங்கிலங் கையும் யேந்திரமு
மணுவா மென்விகழ்ந் தெயுயாந்
தந்தாம் புவனிபா தலமென் றுமூன்றிடத்
தருமை யாச்செம் பொன்னிந்

துங்கமி குவெண்பொன் னினுங்கரும் பொன்னினுஞ்
சூழ்மதி லுடனி லங்கித்
தூவியம் பறவை போலெங்கும் பறந்துலவு
தோலா தவலி படைத்துப்

பொங்கமோ டெழுந்துவிண் ணாடாதி நாட்டிளரமற்
பொள்ளென விறங்கிவ தைசெய்
புரமூன் றுமப்புரத் தசுரரு மொருங்கற்
புனமு றுவறந் திட்டமா

தங்கம லைவில்லி கைப்பற்று செங்கையினாற்
சப்பாணி கொட்டி யருளே
சதுர்வேத மெய்த்தலை விபுதுவா புரிக்கிறைவி
சப்பாணி கொட்டி யருளே 2

அருமறை களாகம் புராணசாத் திரநீதி
யாதிப லகலை யுமோங்க
வந்தணர்கள் பூவேந்தர் வசியர் சூத்திரர்
மக்கா முறைவழா மலோங்கக்

கருமவி னையால் வந்தவறு மையுற்றாக்
குமெக்சாலு நிரைசெல் வமோங்கக்
காசினி யிலோரக் கலங்கார சுகபோகமெய்க்
கட்டபூ குமுதல வோங்கப்

பெருமை மிகுவேதன் மாதவன் முதலினோர்
போற்றும் மானெனுங் கணவனும்
பேட்டிற்று நாடோறுந் தகம்மகி ழ்ந்திடப்
பெருகுமி குநாழி நல்லாற்

றரும்மெண் ணுனகும புரிந்துசெங் கையினாற்
சப்பாணி கொட்டி யருளே
சதுர்வேத மெய்த்தலை விபுதுவா புரிக்கிறைவி
சப்பாணி கொட்டி யருளே 3

நவமேவு புவனியிற் பருவமா றாமல்விண்
ணுகமுகின் மாரி கொட்ட
நகுமணி குயிற்றுமுடி மன்னர் மறுநூன்முறை
நயந்துள மகிழ்ந்து கொட்டச்

சுவையாரு முத்தமிழ்ப் பாவலர்சொன் மாலைநற்
றூயமு திசைந்து கொட்டச்
சுருதிலையை நீங்காத மாடகநல் லியாழிசை
துலங்கு கந்திருவா கொட்டச்

சிருநேசர் தேவராவர் வாசகத் தேவைத்
திருவாய் மலர்ந்து கொட்டத்
தேவரோ டாம்பெயர் கறுன்றெரி சனஞ்செய்து
தினமுமென் மலர்கள் கொட்டத்

தவயோகா கைகொட்ட நினதுசெசங் கையினாற்
சப்பாணி கொட்டி யருளே
சதுர்வேத மெய்த்தலை விபுதுவா புரிக்கிறைவி
சப்பாணி கொட்டி யருளே 4

கமலமலர் வீட்டுலவு நான்முகக் கடவுளைக்
கடபோ றிகலங் கமோதிக்
கடியசிரை யனில்வைத் தவோராறு முகமிலகு
கவனிளஞ் சிக்கத் தையு

மமரர் கள்பணந் தேத்துமைந் துகைத்தல
மோரடற் கொட்டு வெழுத்தையு
மன்புடன ளித்துவவகை கூர்ந்தினிய வருள்பொழியு
மஞ்சள் மலர்க்கண் மானே

இம்மொடு கருங்கங்குல் குடிவாக் கியோட
வாளெந் தூயிரங் காங்கொண்
டெழுமிளம் பருதிகொ டிகள்சூழ்ந் தவென்வெயில்
றித்தசெம் மணியி ழைத்த

தமனியக் கங்கண மிலங்குசெங் கையினாற்
சப்பாணி கொட்டி யருளே
சதுர்வேத மெய்த்தலை விபுதுவா புரிக்கிறைவி
சப்பாணி கொட்டி யருளே 5

நிலவுதரு வெண்முத்து மாரமும்பைப் பொன்னு
நிரை திரைக் கவான்றி
நீணிலத் திலகுமு யிரயார்வும் முதன்னவரு
நிரை நீர்ப்பினா கநதியு

மலகுறு செபூஞ்சாலி முதுரை கழைவாழை
தெங்காதி யவளங்க ளெவையு
மரிதான விரதசிவ தவமிகுந் தக்கொரு
மாலை யங்களும் விழாவும்

பலபொருள் விளங்க கடைவீதியும் நீதியும்
பாடலோ டுநட மாடலும்
பங்கயத் திருமாது நீங்காத செல்வம்
படைத்த வருநற் றரும்முங்

குலவிவ ளர்தண்டை நாட்டுயர்புது வைவிமலியே
கொட்டி யருள்சப் பாணியே
குரைபாதி முடித்தசி வனிடமருவு சத்தியுமை
கொட்டி யருள்சப் பாணியே 6

ஏலமுறு பூங்குழற் றெவ்வம டவார்முகத்
தெழில்கவர் தானை நாடி
யெய்தியது போல்நீள் கழிக்குண முகையவிழத்
திலகு செங்கமல மலரின்

மேலமரும் வெள்ளன்ன மாழிபுனற் றோய்ந்து
தாழவிரி சிறைப்பா சிபோர்த்து
விற்றுர மீதெழுக கண்டுகன் னங்கரிய
வெற்றறன் மாதென் றெண்ணியே

சீலமுயர் பெட்டன மருண்டல்ல லுறுபோது
சித்தங் கலங்கிட லேனாச்
சிறகுதிறி முன்வடிவு காட்டியுள் ளன்புடன்
சேர்ந்தணை.ந் துவகை கூருங்

கோலமலி வளமுகம் புதுவைவரு பைங்கிள்ளை
கொட்டி யருள் சப்பாணியே
குறைமதிமுடித் தசிவனி டமருவு சத்தியுமை
கொட்டி யருள் சப்பாணியே 7

நற்றமை பெருமஞ் சுதவிழநெடுஞ் சரலேக
நாடு மைக்கண் கனாக
நந்தாத போற்பாடங் குலவுபெ ருவாயின்
றைகொ ளிதழவா யதாக

மற்றொப்பின் மேனிலைக் கோபுரஞ் சிந்துர
வயங்கு நன்னெற் றியாக
வண்சிகர முணிறும ணிக்கொடிகள் பைந்தேன்
ஒழுகும ருமலர்க் கூந்தலாக்க

கற்றவர்கள் புகழேயி லுறுப்புமுத்த ணியிலகு
கவினிளங் கொங்கை யாகக்
கமலத்து நீர்கழியா டையரப் பெற்றிடுங்
கைமதி லென்னு மெழிலார்

கொற்றமகள் சூழ்ந்தோங்க வளர்புதுவை வருகௌரி
கொட்டி யருள் சப்பாணியே
குறைமதிமுடித் தசிவனி டமருவு சத்தியுமை
கொட்டி யருள் சப்பாணியே 8

கமகம வெனமண மிகுமலர் புனைகுழல்
கற்புயர் பொற்பூவை
கருதினர் நலனுர வினிதருள் பெருகுகடைக்
கடைக்கண் மலர்த்தோகை

திமிதிமி யெனவன வரதமு நட்மிடு
சிறபான மெய்த்தேவி
செமகுள றுதவருள மகிழகொ டுதெரி
சித்திடு மூச்சூலி

நமநம வெனவடி யவரதி துசெய
நற்கண மிக்காயி
நதிபதிமினி சதுயில பவனிணை யவளெறு
நச்சா வப்பூணி

குமுகுமு வெனமுர சதிர்புது வையமலி
கொட்டுக சப்பாணி
கொடியிடை யழகிய வடிவுறு திரிபுரை
கொட்டுக சப்பாணி 9

உரைபெறு தவமுய ளமலை பரையனிட
முதித்தவருட் கோதை
யுலகினிலே வர்களு மெழுதகு சுருதியினுப்
பொருளுக் காதி

நிரைநி ரையமார் கடொழவர் முதுவிய
நித்திய நிட்சேபி
நிலை தவறியதன் பதவி ழிமறைய
நினைத்து சினச்சூரி

தரைமக ளொடுதிரு மகள்கலை மகள்புகழ்த்த
துவமெய்ச் சோதி
தகைநில வியசிவ சமயநெறி களுணர்
தக்கவகுக் காவி
குரைகடல் விரிதுறை திகழ்புது வையமலி
கொட்டுக சப்பாணி
கொடியிடை ழகிய வடிவுறு திரிபுரை
கொட்டுக சப்பாணி 10

# முத்தப் பருவம்

அரிபுரந்தா யனமுத லியோர்தே டுதற்கரிய
தோருவே யினமுதத்
மாசையோடு நன்மணஞ் செய்திடந்தா மேவியருள்
கூர்ந்தபச் சைமணியே

எரிபுலவன் றாங்கவ ருமையாச்சர வணத்திடை
யவதரித் தசிங்க
மினிதாமடித் தலந்தனி வேறிவிளை யாடுமெழில்
கண்டுவந் தபிடியே

பரிபுரங் கொஞ்சிட நடந்து நளினத்துமேற்
பரிவுற்றிருக் குமன்னம்
பன்முறை வணங்கி யிகைகூப் பியன்புடன்
பாவமகிழ் தெய்வமயிலே

திரிபுர சவுந்தரா நந்தியே நின்துவாய்
செங்குமுத முத்தருளே
செங்கண் மாறங்கை யெனுமங்களா காநங்கை
செங்குமத முத்தருளே 1

மூவரை னுந்தரு மநூலினுக் காசியே
முத்திக்குநற் றுணைவியே
மூடிகரப் பனமகஞ் சிதைத்தோ னெந்தை
முருகனின்னோக் கள்ளையே

பாவாண ரென்றும் புகழ்ந்திடுஞ் செல்வியே
பத்தருக்கனு கூலியே
பகருமுது மறைமுடி யிடைமிடுஞ் சத்தியே
பஞ்சாட்சரக் கௌரியே

தாவாதபச் சிளந்தெய் வமானே யிமைய
சயிலத்தணிப் புதல்வியே
சதகோடி பானுவினு மொளிமிகுஞ் சோதியே
சடசமைய பரிபாலியே

தேவாதிதே வனுக்குந் தலைவியே நினது
செங்குமுத முத்தருளே
செங்கண்மா றங்கையெனு மங்களா காநங்கை
செங்குமுத முத்தருளே 2

பொன்பயின் றுந்தாது விரிசெழும் பங்கயப்
போதின்ற முத்தமரிதோ
புவிமடந் தைக்குடை யதாகுமுன் னீருட்
போதிந்திலகு முத்தமரிதோ

மின்பிறழந் திருநெடி யவாகாய மீதுலவு
மேகத்தின் முத்தமரிதோ
வெஞ்சின மிகுந்தமும் மதயானை வெண்கொட்டின்
மேவுமுண முத்தமரிதோ

மன்பெறு பசுங்கதிர்க் குலைநில செந்நலின்
மருவுமணி முத்தமரிதோ
மார்வெள்கைச் சிலையெனுஞ் செங்கரும் புதுரு
வண்மையுறு முத்தமரிதோ

தென்புது வைவருகெள ரியேயருமை பெறுமுனது
செங்குமுத முத்தமருளே
செங்கண்மா றங்கையெனு மங்களா காநங்கை
செங்குமத முத்தமருளே 3

எழுபசும் புரவியீர்க் கின்றவோ ராழியோ
டிலங்கியமணிப் பொதிகை
யெந்தழிற் காற்கோடிஞ் சிப்போலென் ரிடையி
யங்குமாதித் தனொளியாணி

முழுநிறச் செயிதழ் முருக்கவிழ்ந் தூற்றுநறை
முளரிப்பொ குட்டனைமிசை
பொய்சிறை யிளம்பெடை யோடகமகி ழுவுகூரன்ன
மோகமிகும ணமியற்றப்

பழுதிலபூந் திவலைகொடு பாசடை களைததாற்
பாயபுனற் றமடந்தை
பச்சைமணி யின்கலத்தில் குமுதத் தாஞ்சனம்
பண்புடனெடுத் தலொக்குஞ்

செழுவளந் திகழ்புதுவை வருதுயர் பரைநினது
செங்குமுத முத்தமருளே
செங்கண்மா றங்கையெனு மங்களா காநங்கை
செங்குமத முத்தமருளே 4

விகடமி குதறுகடக டாமொழுகு ளடதடவெண்
மருப்பியா னையோதை
வெங்கலின்வாய் மணிக்கார்க் கவரியசை யுந்துத
வேகங்கொள் புரவியோதை

சுகமதிற் வுலவுபொற் றிண்டிற்ற சகடமுருடா
துற்றதெ ரினோதை
சந்தமு நீங்காத வேதமுத லியகலைகட
ருகல்வி யூரியோதை

புகலரியதி குவிழாக்கலி யாணமுர சோடு
பொலிந்தசங் கீதவோதை
பூசுராருந் தவர்களு வகைபெற வன்னம்
புசித்திட வழக்கமோதை

திகழுமணி வீதிசெறி புதுவை வருதேவிநின்
செங்குமுத முத்தமருளே
செங்கண்மா றங்கையெனு மங்களா காநங்கை
செங்குமத முத்தமருளே 5

நேசமி குநற்றொண் டாணோ
நெஞ்சிலு றைபஞ் சிறையினமே
நிதமும் போற்றுங் கவிவாணர்
நினைத்த தருனுங் கற்பகமே

பேசவ ரியதவ முனிவர்
பிழையின் மௌனத் துள்ளொளியே
பிறையத் தரித்தோ னிடபாகம்
பிரியா திருக்கு மரகதமே

பூசின்று நதர்தா டறியார்
பொங்கும வர்ப்பூங் குழன்மயிலே
புவனமெல் லாமொருங் கீன்ற
பொய்யாக் கருணைக் கண்ணிகையே

மாசிலெ ழிற்கற் னைங்காசே
மணிவாய் முத்தந் தருவாயே
மன்னுபு துவைத்திரி புரையே 6
மணிவாய் முத்தந் தருவாயே

உன்னே யுயிரே யுயிர்க்குயிரே
யுணர்வே யுணர்தற்கும் பொருளே
யுளமே யுள்ளத் தொளிரொளியே
யுறவே யடியேற் கொருதுணையே

தானே தானாயவ தரித்த
தாயே தவமே தவப்பயனே
தனனே லிமேதண் புனலே
தழலே வளியே தனிவெளியே

தேனே சுவையே தெள்ளமுதே
தருவே யருவே தீங்கரும்பே
செயமே நயமே செம்மணியே
திறமே யறமே செழும்பிடியே

மானே குயிலே மடமயிலே
மணிவாய் முத்தந் தருவாயே
மன்னுபு துவைத்திரி புரையே
மணிவாய் முத்தஞ் தருவாயே 7

பதுமநா பன்சோ தரியே
பத்தாக் கருனுமா துரியே
பன்மை யுலவுமலை மகளே
பாய்வேள் விடையோன் மணமகளே

சதுர்வேதந் தேடரிய மின்னே
தமியென்று திக்கும் பசும்பொன்னே
தண்டாரி தழிவே யந்தவளே
தாருகனே முன்காய்ந் தவளே

முதுமை யிளமை யிலாவடிவே
முலாதா ரப்பொருண் முடிவே
மோட்சமு தவுகா ரணியே
மோனங் கடந்த பூரணியே

மதுர குமேன் மொழியுமையே
மணிவாய் முத்தந் தருவாயே
மன்னுபு துவைத்திரி புரையே
மணிவாய் முத்தந் தருவாயே 8

மத்தகெ சத்தை வெறுத்தணி மொய்த்து
மதத்தனத் தெழிலாய்
மைய்ப்புய லைச்செலெனக் கறுவிக்கண மணக்கு
மலர்க்கு பூலாய்

தத்தை யிலச்சை யுறப்பெருமைக் குதலச்
சொலுரைக் குநலாய்
தப்பில யிற்படை யெச்சின விச்சுகிர்த்து
தயவுற் றகணாய்

சத்துவ ளைக்கிழ விட்டும ணிக்குழை
துற்றொளிர் பொற்செவியாய்
சுப்பிர நற்றா ளத்தை வெருட்டுசுடதத்
தணகைப் பொலிவாய்

முத்தா கப்பது மத்துரை வித்த
முத்தமளித் தருளே
முப்புவி சொற்புது வைப்பதி யுத்தமி
முத்தமளித் தருளே 9

முச்சிகாப் படையைக் கைதரித் தவணை
முத்தமளித் தருளே
முப்புர மெய்க்க நகைத்தெரி யிட்டவன்
முத்தமளித் தருளே

முச்செயன் முற்றவ ருடகண டத்துவண்
முத்தமளித் தருளே
முப்பக வாக்குயர் வெற்றிய ளித்தவண்
முத்தமளித் தருளே

முச்சுது ரைப்பரி வுற்றுவி தித்தவண்
முத்தமளித் தருளே
முப்பெயைற் றவருட் டெளிவற் றவண்
முத்தமளித் தருளே

முச்சுட ரைக்கணெ ணக்கொடு தித்தவண்
முத்தமளித் தருளே
முப்புவி சொற்புது வைப்பதி யுத்தமி
முத்தமளித் தருளே 10

# வருகைப் பருவம்

வண்ணமி கும்பூங் கதலிகளும்
வாசம் வீசுமலர்த் திரளு
மதுரந் தருதே மாவினமும்
வளர்தீஞ் சுவையா லைக்கரும்புந்

திண்ணம் பெறுதெங்கின் றொகையுஞ்
செழுங்கொத் திலகிய யாகமுகுஞ்
சிறைவண்டு லவுமலர்க் காவுந்தேனார்
செந்தா மரைத் தடமு

மெண்ணமுறு செஞ்சா லிகளுமெழின்
முத்துயிர்க் குஞ்சங் குகளு
மிரைதேர் குருக்கும னகக்குழவு
மெங்குநி றைந்து பெருவளங்கொ

டண்ணம் பழனந் திகழ்புதுவைத்
தாயே வருகவ ருகவே
தவத்தோர் போற்றுந் திரிபுர
சுந்தரியே வருகவ ருகவே 1

குலவுசெ ழுங்குங் குமமிளகு
கொட்டம கிறகொ லமுதற்
கூறும லையிற் படுபொருளுங்
கொழுந்தே னாவிடி யிற்பிலி

யிலகுமி றலியாக் தாதியி
யங்குங் கானிலு றுபொருளும்
யானைபித் தன்கருங் குரங்கோம
றைகண் ணாடிநகர்ப் பொருளும்

பலணோண் வாழைசெந் நெல்சிறு
பயறிக் கிளநிர முதனாட்டிற்
படுநற் பொருளுஞ் சங்குப்பு
பவளமொடு கொக்கரை முத்தார்

சலதிப் பொருளுநிறை புதுவைத்
தாயே வருக வருகவே
தவத்தோர் போற்றும் திரிபுர
சுந்தரியே வருக வருகவே 2

நானாக லைவல் லோர்கணித
நாடிப்பு கழுந்துரந் தரியே
நகுமா மணிப்பல் றலையநந்த
னாகமி லங்மிலங் குகங்கணியே

மேனாட் டமரா திபதி
மெச்சிப் பணியுஞ் சங்கரியே
வேதா கமங்கடெ டரியமே
சொற்குத லையஞ் சுகமே

தேனா ளகத்தரம் பையர்கள்
சிந்தித் துவக்குமங் கலையே
தேவதே வனிடப் பாகஞ்
செழித்து வாழுமம் பிகையே

தானாபா ணாமிகும் புதுவைத்
தாயே வருக வருகவே
தவத்தோர் போற்றுந் திரிபுர
சுந்தரியே வருக வருகவே 3

பருவமங் குலபெய் துலகமின்
புறுபயிர் தழைந்திட வருகவே
பணியுமென் றணையிடர் செய்வன
பிணிபல வுமங்கிட வருகவே

மருவருந் தவமுனி வரந்தணர்
மகிமை தங்கிட வருகவே
சலதிப் பொருளுநிறை புதுவைத்
தாயே வருக வருகவே

உருகுமன் பொருபா வுதொண்டர்
களுளமு வந்திட வருகவே
யுலவுமன் பதைவறு மைகொண்
டுழலுறு கணைந்திட வருகவே

பொருநர் சந்தத முறைநிலங்
கொடுபுவி புறந்திட வருகவே
புதுவை யம்பதி நிலைபெறுந்
திரிபுர சவுந்தரி வருகவே 4

சதுமுகன் றிருமக னிதம்பணி
தலைவியந் தரிவருகவே
தமியனெஞ் சுறுதுயர் களைந்தகுடரு
துரந்தரி வருகவே
பதுமமென் பதநினை யுமன்பர்கள்
பவயங்கரி வருகவே
பகருஞ் சிறுமுறு வல்கொண்டடு
பகைவெலகங் கரிவருகவே
மதுமிகுந் திடுமலர் நறுந்தொடை
வனையலங் கரி வருகவே
மகரமொண் கடல்விட மிலங்கிய
மணிகொள்கந் தரிவருகவே
பொதுவினிங் நிதமுட டைம்புரி
புனிதசுந்தரி வருகவே
புதுவை யம்பதி நிலைபெறுந்திரி
புரசுந்தரி வருகவே 5

மைதவழு மணிநெடுஞ் சிகரமாளி கையின்கண்
மனையரம் பூண்ட தற்பின்
மாறாத விருவினை தொலைத்தைம் புலன்வென்று
வன்பகை யோராறு மாற்றிக
கைதவமிகுந் தவிழ் மடமாத சுக்மாதி
கைவிட் டுடற்று குளிர்நோய்
கடும்பசி பொறுத்துமெய்ப் பொருளை யுட்கருதி
வெங்கா னத்தும லையிடத்தும்
மெய்திய ரிதானமர வுரியுடுத் தைந்தென்னு
மெரியி டைத்தர்ப் பாசனத்
திருந்து கொண்டட்டாங் கநிட்டை நிலைபெறும்
யோகமினிது பலநாண் முயன்று
செய்தவ முயர்ந்தில குமாதவா நிதம்பாவு
சிவது நந்தரி வருகவே
சீதவன மாலிபுகழ் வேதவனநா தர்மகிழ
திரிபுர ராம்பிகை வருகவே 6

மகபதி மணந்தம கணதிபதி பயந்தமகண்
மலரயன் விழைந்த ருணமகள்

வண்மைதிகழ் விசையம கள்டண் மைகொள
சகச்சிர முகமந் தரகினப் பெயர்மகள்
ககனமுறுகற்ற புமகள் பொறைகொள்சி ரவனிமகள்
கடவுள் குஞ்சரி யெனுமகள்
கவினாறு மிரதிமகண் முதலான வாமகளிர்
கைதொழ வரந்த ருமகள்
இகபரசகா யமகள் பதிபவம வானமக
ரிமயம லைபெற் றிடுமக

ளீசனிட நேசமகள் மாசின்மன வாசமக
ளுளன்னான் கறம்பு ரிமகள்
செகமுதவு கருணைமகள் றிவரியத லைமைமகள்
செழியர் கோன்மகள் வருகவே

சீதவன மாலிபுகழ் வேதவனநா தர்மகிழ
திரிபுர ராம்பிகை வருகவே 7
மஞ்சுகுடி கொண்டதகாங் கமழகருங் கூந்தன்
மதுமலர்த் தொடை யலாட

வண்டிலகநு நுதலொளிர் வச்சிரச் சுட்டியு
மணிப்பட் டமுந்து லங்க
வெஞ்சுத் விலாவெ ழிற்செவி யிடைமணித்
தொங்கலேந் துபொற்குழை விளங்க
வேடவிழ் நறுங்காந் தளொத்த செங்கா
மீதிசைந் தகங்கண மிலங்க
அஞ்சனங் குலவுவிழிய ருள்பெருக வுரமதனில்
விரதா ளமாலை யசைய
வணிதிக ழுமுதாபந் தனமுடன் கிரணமணி
யார்ந்த மேகலை வயங்க
செஞ்சரோ ருகமென மலர்ச்சாண கிண்கிணி
சிலம்போ சைதர வருகவே
சீதவன மாலிபுகழ் வேதவனநா தர்மகிழ
திரிபுர ராம்பிகை வருகவே. 8

அரனிடத் தவன்வரு கபுரமெ ரித்தவன்
வருகவருள் பராசத் திவருவ
வளம் வளர்த் தவன்வரு கதிருமி குத்தவன்
வருகவ மராபர்ணி கௌரிவருக
பரமசுந் தரிவருக வுரககங் கணிவருக
பககுமுக் கண்ணி வருக
பரவுமுத் தமிவருக சயிலபுத் திரிவருக
பரிமளக் குழலி வருக
வரமுத வுபரைவரு கசுருதிபுக ழுமைவருக
மகிடசங் காரி வருக
வடிவழகி வருகவடி யவர்கருதி நிநதிவருக
மதுரை யாளர சிவருக

திரள்கலை வல்லவிவரு கசமரபயி ரவிவருக
சிங்கவ ரகினி வருக
சீதவன் மாலிபுகழ் வேதவனநா தர்மகிழ
திரிபு ராம்பிகை வருகவே 9

கயங்கொண் டதிசை யெட்டுமுன் றுலகமுந்
தனதுகட் டளைக்குள் ளடங்கக்
கதிர்செய் மணிமுடி வேய்ந்துசி றுவிதியெனத்
திகழ்கவி னபெயர் படைத்துதக்க

னயங்கொண் டவருள்பரா சத்தியுணை மதியாத
நவையிருண் மனத்தெ முதலா
னாறுமெதிரே வருமில ரெனுமாண வங்கொண்டு
ஞானமூர்த் தியைவெ றுத்துப்
பயங்கொண் டசங்கேந் தியயனா தியோர்க்கவிப்
பாகம் பகுப்ப னென்றுட்
பரிவினோ டுபுரிம கமுமவனு மத்தேவரும்
படருறச் செரும லைந்து
செயங்கொண் டவீரபத் திரனை யருள்கண்
ணுதற்செல் வியெனுமை வருகவே
சீதவன மாலிபுகழ் வேதவனநா தர்மகிழ
திரிபு ராம்பிகை வருகவே 10

# அம்புலிப் பருவம்

தங்கம ஈமேருவெ னுமொப்பற் றமலைதனைச்
சந்ததம் வலங்கொள் வைநீ
தையலி வளம்மலை யையுமுப் புரமழித்
தநாட்டனு வெனவலங் கொண்டனள்

தூங்கமி குதிருநீ றிலங்குக டவுட்கொளி
துளங்கி டக்கண் ணாயினைத்
தோகை யிவளக் கடவுளைப் பிரிவிலா
மலெழிறோன் றிடக்கண் ணாயினண்

மயகல முறுந்தடத் தளியிசை கொன்றை
பெருகுவ னம்வெறுத் திடுவைநீ
மங்கையிவண் மெய்யின் பிலாதமுடர் களிதைய
வனசம வெறுத்திடு வள்கா

ணங்கணு லகருறு மையுநீ யுநிகரா
தலால்அம் புலியா டவரவே
யானிடங் குலவுதி ரிபுரச வுந்தரி
யுடனம் புலியா டவரவே 1

குயம்முத லட்டாங் கயோகத் தினிலைமை
பெறுமிரு குடியத்திரி தன்மகன்
யிவளுமோ விண்ணள வுயர்ந்து மேம்பாடு
பெறுமிமை யவத்திரி தன்மகளாம்

வயமிகுங் கதிகொள் பைம்புர விவேழ்பூண்ட
தேர்வா ளரிக்குற் றதுணைநீ
வனிதை யிவளிர ணியறுரத் தைப்பிளக்கு
முகிரவா ளரிக்குற் றதுணையாம்

கயமரு வியிதழ் முறுக்கவி ழாம்பலுக்
குநீகா தலன்பார்த் ததைக்
கனகம லையிற் பொறித்திரு மாம்பலுக்
கிவன்கா தலன்யா மதிக்கி

வயாவிலு றைவொப் புமையின் வருகென
வழைத்தன றம்புலி யாடவரவே
யானிடங் குலவுதி ரிபுரச வுந்தரி
யுடனம் புலியா டவரவே 2

நிறைமதி யெனப்பெயர் படைத்தனை பெருங்கரு
ணைநிறை மதிபடைத் தனளிவ
ணியாதிச டிலமீ துலவுவை யிவளவேத
நீள்சடி லமீது லவுவாள்

பொறையின் மேலா வைநீய டியாதம்
பிழையெனாப் பொறையின்மே லாகுவளிவள்
புலவனைத்தந் தைநிகலை கள்பல வுணர்கின்ற
புலவனைத் தந்தன ளிவள்

குறைவிலா நுந்தமக் குள்ளசேய் னாடிற்
குணங்குறி நிகர்த்தி டுதலாற்
கூடிவி னையாட நலமா மினிச்சொல்வ
தெனகோ கநகம வரோன்பணிந்

தறைதுதிக் கோனூ புரப்பொற் பதச்செல்லி
யுடனம் புலியா டவரவே
யானிடங் குலவுதி ரிபுரச வுந்தரி
யுடனம் புலியா டவரவே 3

கதிரவன் றனதுவெ யின்முன மொளிமழுங்
கும்வெண் கலைதரித் தனையாயிரங்
கதிரவ ரகடம் மிறுமிலங் குமாணிக்
கமேகலை தரித்தன ளிவளுமே

விதியை யருணமா லுறங்குஞ் சயனமான
பால்வெள் ளத்துணீ யுதித்தாய்
மெய்ஞா னியர்க்கு வீடுதவுஞ் சிவானந்த
வெள்ளத் துதித்த னளிவள்

சிதிமுதல் மூவொன் பதெறும் அரிவையரக்
கினியதலை வனியா மவர்தொழுஞ்
சிவசநா யகிமுதற் றெய்வம டவார்க்கெலாந்
தலைவியி வளாம திக்கி

லதிகமா மினாக்கா வதலானமயுட
னம்புலி யாட வரவே
யானிடங் குலவுதி ரிபுரச வுந்தரி
யுடனம் புலியா டவரவே 4

மழைத்துளி யுகுத்தார்த் தகனற்வா னமீதுலவு
மங்குலி னோடுங் குமுன்மேய்
மங்கையிவ டன்பசிமெய் யொளியினாற் கரிய
மங்குலை யோடுங் கவைத்தான

தழைத்திடு கரும்பேந் துமுருவி லானுக்குநீ
சத்திர மெனப்பொ லிந்தாய்
சத்தியி வடானுருப் பெறுமுயிர் களயிலன்ன
சத்திர மனந்தம் வைத்தான்

பிழைத்திடற் கெளியவி டவாயாவினுக்
குளம்பெது றவெருண் டோடுவை
போர்வை யணியெனப் பூண்டன ளிவட்குநீ
பேதமா யினுமன் பினா

வழைத்தன ணிளம்பொற் பசுந்தோகை யாதலா
லம்புலி யாட வரவே
யானிடங் குலவுதி ரிபுரச வுந்திரி
யுடனம புலியா டவாவே 5

முன்னகைத் திகலரு ரட்டநா ளிறைவனான்
முறிபட் டதேர்ச் சில்லிநீ
முடிகப் பாகனி டுசாபமா றாதுகூன்
முதுகுற் றகய ரோகிநீ

பன்னகக் கோள்கொடி யவிடவா யினாலுண்டு
பார்த்துமி ழந்திடு மெச்சினி
பாகீ ரதிசக் களத்தித லைவாசற்
பரிந்து உறைகுருத் துரோகிநீ

மின்னனார் வீதியிற் கூடியெரு விட்டேறிய
மேவுசி றுமதி யானநீ
மேம்பா டிலாதவு னைப்பொரு ளாயழைக்கு
மிவண்மென் மைசொல வரிதாதலா

லன்னவ யல்சூழ் புதுவை வருபராசத்
தியுடனம் புலியா டவரவே
யானிடங் குலவுதி ரிபுரச சவுந்தரி
யுடனம் புலியா டவரவே 6

வானூரப திதவமு யன்றுகௌ தமர்சாப
மாற்றிவே தம்பெற்றது
மௌனயோ கம்புரிந் தங்தாங் கப்பூசை
மலாயன னான்பெற்றது

மேனாளுருத் திராக்கம் பூண்டுந ணுகுற்ற
மேதாதிக திபெற்றது
மேவிரா மன்சிவாற் சனைசெய் துபாசுபத
விசிகநண் பொடுபெற்றங்

கோனான வந்தகா சுரனங் கிதேவலள்
கூறுமுப்புர ராதியோர்
குறைவில சிரபெற் றதுவுமித்தல தத்தேநீ
குறித்தணு கிலுன்குறைதவிர்ந்

தானாதசெல் வங்களி பபொதுபெற் றுயவை
யம்புலியா டவரவே
யானிடங் குலவுதி ரிபுரசவுந் தரியுட
னம்புலியா டவரவே 7

விடங்கொழிக் குந்துளையே யிற்றுவா ளரவம்
விழுங்காமவொ ருமையுற்று
மெய்ப்பான் சடைமீ துகூடிவிளை யாடிட
விரும்பியே யுனைவைத்தன

டிடங்கொதிக் குந்தக் கண்வேள் வியறகாலினுற்
றெய்ப்புண்ட ழிந்தஉன்னைச்
செங்கதிர்க் கெதிராக வெண்கதி ரேனச்சொலச்
சேனிடை விளங்கவைத்தாள்

மடங்கொதிக் குந்தகை யிராவணன் றன்தூருள
வாவஞ்சிய கலுமுன்னை
மாயவனெ னுந்தமை யனாலவ் விலங்கைதனின்
மானமோடு வரவைத்தன

டைங்கொதிக் கும்புத் திவிட்டடை வதேநன்மை
யம்புலியா டவரவே
யானிடங் குலவுதி ரிபுரசவுந் தரியுட
னம்புலியா டவரவே 8

நவமே வுக்குணையுடன் வரவென்ற ழைத்திடவு
நணுகாதிருத் தல்கண்டா
னம்மனைக் கும்பகை செய்தனை யெ'ன்றுவேழக
நாதன்முன மிட்டசாபந்

தவிராதிருக் கமேலுஞ் சினந்தென னென்னதான்
செய்வனொ காலினாற்
றக்கன் யாகத்துணைத் தேய்த்தவன் சீறிற்
றடுப்பவர்கள் யாவர்நீயுற்

பலமாகும் வேலைதனில் வேலைவிட் டுபின்கடும்
பகைகொண் டுறுக்கிலண்ட
பகிரண்டம தனினும் பாதுகாப் பவரிலைப்
பலவிதத் திலுமுன்றனக்

கவமானம் வருமாகி லெவருனை மதிப்பர்
காணம்புலி யாடவரவே
யானிடங் குலவுதி ரிபுரசவுந் தரியுட
னம்புலியா டவரவே 9

நம்பியவள் பக்கநீ வாராதிருப் பையெ
னமனவீழ் முன்முதைத்த
நளினத் திருப்பாதமுண் டுவெனைக் காய்ந்த
நயனமொன் றுண்டுநாளும்

மும்பருக்குத் துன்பம் வருவித் தமுப்புர
மொருங்கெரிசெய் நகையுண்டுமா
லுந்தியி லுதித்தவன் மகுடச் சிரங்கொயித
வுகிருண்டிலங் கையாண்ட

கம்பத் தனமலை வெடிப்பிற் கிடந்தலறக்
கன்னறுூன்றுவி ரலுண்டடுங்
களிறுண் டுபுலியுண்டுசிங்கமுண் டழல்விடக்
கட்செவி யுமுண் டுபகைகொண்

டம்பாத் தினிலுனைப் பம்பர மதாட்டுமுன
மம்புலியா டவரவே
யானிடங் குலவுதி ரிபுரசவுந் தரியுட
னம்புலியா டவரவே 10

# சிற்றில் இழைத்தல்

19. திருவல வன்பரி வுறுசோ தரியே
சிற்றிலி ழைத்தருளே
திருபுவ னந்துதி செயுந ராணியே
சிற்றிலி ழைத்தருளே

திருவல ரின்பத யுகநா யகியே
சிற்றிலி ழைத்தருளே
திருபுடை வஞ்சரு ளணுகா மயிலே
சிற்றிலி ழைத்தருளே

திருவர மன்பொடு தருகா ரணியே
சிற்றிலி ழைத்தருளே
திருபுரை சங்கரி சிவையர மனையே
சிற்றிலி ழைத்தருளே

திருவரு டந்தெளி யனையா ளுமையே
சிற்றிலி ழைத்தருளே
திரிபுர சுந்தரி யெனுமா தரியே
சிற்றிலி ழைத்தருளே 1

அளிகுல வுங்கடந் திபாய்க வுளாரத்
திமுகற் கணையே
யனுதின மன்பர் களுளம் துறைநீ
டற்புது மெய்க்கனியே

வெளிபவ னந்தழ னில்நீ ரவடிவாம்
வித்தகி தற்பரையே
விரைகம ழைந்தகு நிழல்வா ழிமையோர்
மெச்சபு கழ்க்கிளியே

யொளிகிளர் சிந்துர வெழில்சேர் நுதலா
ரொப்பறு கொற்றவையே
யுயர்பர மன்றனை யகலா தருள்கூ
ருத்தமி பொற்கொடியே

தெளிதமி ழொண்புது வையின் மேவுமையே
சிற்றிலி ழைத்தருளே
திரிபுர சுந்தரி யெனுமா தரியே
சிற்றிலி ழைத்தருளே 2

எழுவகை யுற்பவ மெண்பா னானூ
றாயிர மெனுமலகா
ரின்னுயி ராபை லபாவை களுக்கெழி
இளமை வளர்ச்சி சூணம்

பழுதகல் கல்விக ளிப்புச் செல்வம்
பரிவொடு சுகமுதலப்
பாலித துண்ணி னனாடி நடத்தும்
பார்வதி யேவாணார்

முழுமதி யெனவிரி கதிரிள நிலவுமிழ்
முத்தின பாவைநிற
முதிர்மர கதமணி யுறுமைப் பாவை
முழங்கெரி யெனவொளிர்செய்

செழுமணி திகழ்பொற் பாவை விளங்கச்
சிற்றிலி ழைத்தருளே
செல்வப் புதுவைத் திரிபுர சுந்தரி
சிற்றிலி ழைத்தருளே 3

அம்பைப் பொருதஞ் சன்மணி வரிவிழி
யருளொடு வந்தாட
வாலித ரும்புயல் வெறிற்கரு மைகொள்
ளகமசைந் தாட

வம்பைக் கிழிதந் திறுமாந் தொளிரிள
வனமுலை யணியாட
வசைம் பயமெய் தத்திகழ் செங்கை
மணிப்பைந் தொடியாட

வும்பாப் பயிலா மகளிர் கணுகள்
லோகமடந் தையரோ
டுலவிக் குலவித் திசைதிசை தோறு
முவப்பினெ றிந்தெழிலார்

செம்பொற் பந்தினி தாடும னோன்மணி
சிற்றிலி ழைத்தருளே
செல்வப் புதுவைத் திரிபுர சுந்தரி
சிற்றிலி ழைத்தருளே 4

குலமணி திகழ்பொற் சுட்டியு மிய்குதம்
பையுநி கநீடுகனக்
கோமே தகமுக் குத்தியும் வயிரக்
கோப்புந் தகதகெனத்

தோலை வறவொளிர் மாணிக்கப் பணியுந்
தொடியுங் கலகலெனச்
சோதிகொள் பொற்புறு மேகலை யும்பொற்சு
சும்பள பளென்க

விலையின் மணித்தண் டையுறு புரமும்
விரவிக் கிணுகிணென
மென்மொழி யுங்குர லின்னிசை யுங்கவின்
மெலிக்கலு குலெனச்

சிலதிய ருடனம் மானை யாடும்பரை
சிற்றிலி ழைத்தருளே
செல்வப் புதுவைத் திரிபுர சுந்தரி
சிற்றிலி ழைத்தருளே 5

## சிறுவீடு

பொன்புற மிலங்குநெ டுலட்டலா ளக்குன்று
புரிசையா கத்திகாந்துப்
புறக்கடற் கோட்டை சூழ்கழி யாத்திசைகள்
கோபுரநீ டுவாயிலாக

மன்புகழ் கொளட்டகு லகிரிகள் கொத்கூளம்தா
மாதிரத்தலை வருடனே
மருவுதெய் வச்சேனை யம்மதிற் பொறியாக
மாமேருகொ டிமாமதா

வன்புதி கழாகாய் கங்கைவெண் கொடியா
லகன்றப லதீவும னையா
வாருயிர்க்கு டியேறியி கபரசு கங்கடமை
யறநெறிப்படி யூட்டியா

டென்புது வைவேதபு ரிநாதர்வா மத்தரசி
சிறுவீடு கட்டியருளே
சித்தித ருதிரிபுர சவுந்தரா னந்தியே
சிறுவீடு கட்டியருளே 1

முந்தெழுத் தாய்பொற் சேற்றினான் மொழியாக்க
முற்றுநற்கல் லியற்றி
முப்புணர்ப் பைச்சுவ ரெழுப்பிப் பெயர்சொல்
வினைமொழிகளைத் தூணிறுத்தி

யந்தமுள் சாரியைப் பொதிகை யதாக்கி
யுருபவையுத் திரம்பாச்சிநே
ராகுமெச் சங்கொடுங் கைவைத்து மேற்கருத்
தாவைவளை யாய்ப்பாப்பிச்

சந்தமு ணுணிதைத் தைம்பாலோ டிட்டியற்
சார்ந்த கோளட் டுமறையாத்
தடுத்துமுத் தகமுதல் சித்திரித் திருபொருட்
டகைவிளக்கிட் டியற்றுஞ்

செந்தமி ழிலக்கண மனைக்குள்விளை யாடுமுமை
சிறுவீடு கட்டியருளே
சித்தித ருதிரிபுர சவுந்தரா னந்தியே
சிறுவீடு கட்டியருளே 2

முத்தலைச் சூலமேந் திப்பொடி யணிந்தோங்கு
மூரிவெள் விடையவாக்கு
முன்னீர் நிறங்கொண் டுமண்ணுண் டுவிண்ணீண்ட
முண்டகக் கண்ணருக்குஞ்

சுத்தவே தத்தலை மையுற்றோ திமத்திற்
றுலங்கியுல கீண்டிலர்க்குந்
தென்னறுமுப் பத்துக்கோ டிதேவர் கள்பரவு
சுடர்வச் சிராயுதர்க்கும்

வித்தக மெய்ஞான நிறைமொன் மாதவருக்கு
மேலான சித்தருக்கு
மெய்யன் புமிகுதொண் டருக்குமன் மொருமித்த
விதரணர்களா தியோர்க்குஞ்

சித்தம கிழற்புதப் பதவிதந் தருளம்மை
சிறுவீடு கட்டியருளே
சித்தித ருதிரிபுர சவந்தரா னந்தியே
சிறுவீடு கட்டியருளே 3

ஓவாதபோண் டமானதே சிற்றிலா
வுலகமே யுரல தாக
வோங்குபொன் மலையுலைக் கையதாக
மன்னுயிர் களூரற்தண் டூலமாகத்

தாவாமு தண்டந்தடா வெள்ளநீரினு
சயிலம் விரதா கத்திசை
தாங்கடுப்பா வுலவையூ துகுழலா
வடவை தான்முட் டுதீயதாகக்

கோவாதிப தவிபலகழி வகையோடப்
பமாகதொழு மணமிகச் சமைத்துன்
கொண்கனுக் கற்புதஞ்செய் தவைகள்பண்
டுபொற்குல வவைத்து வகைகூருந்

தேவாதிபன் றொழுதிறைஞ்சுப ரதேவியே
சிறுவீ டுகட்டி யருளே
சித்திதருதி ரிபுரசவுந் தரானந்தியே
சிறுவீ டுகட்டி யருளே 4

பங்கை யச்செல் விவாக்கின் செல்வி
பூங்கற்பகச் செல்விமுதல் தெய்வம்
பாங்கியர் களோடுகூ டிவண்ட லாட்டயர்
பொதுபர மேசனைப் புகழ்ந்து

மங்கல மிகுந்திடுஞ் சுபசோ பனப்பாடன்
மனமு வப்பொடு பாடியு
மாங்குயி லினங்கள் மருளூற்றிட சுகின்னரியின்
மன்னிசை வடித்தொ லித்துந்

துங்கமு றுபஞ்சரப் பூவைகிளி நாணத்
துலங்கின சொலாற் கொஞ்சியுந்
தோலா தபரிகா சவகை பரிந்துந்
தூயசு வைநறுந் தேன்றுளிக்குஞ்

செங்குமு தவாயினூற் குதலைமொ ழியாடுமுமை
சிறுவீ டுகட்டி யருளே
சித்தித ருதிரிபுர சவுந்தரா னந்தியே
சிறுவீ டுகட்டி யருளே 5

# நீராடல்

புலமை ரிகுங்கவி வலர்புக ழும்பிகை
புதுநீ ராடுகவே
பொதியமு வந்திடு முனிபர வும்பரை
புதுநீ ராடுகவே

புலவுக மழ்ந்தொ ளிர்யில வனன்பனை
புதுநீ ராடுகவே
பொடியணி சங்கர னருகில் விளங்குமை
புதுநீ ராடுகவே

புலனழி சண்டனை யுதைதரு சங்கரி
புதுநீ ராடுகவே
புதுமது வுண்டனி யிசைபயில் குந்தளி
புதுநீ ராடுகவே

புலவர் வணங்கிய கணபண கங்கணி
புதுநீ ராடுகவே
புதுவை நிரந்தரி திரிபுர சுந்தரி
புதுநீ ராடுகவே 1

குவடுயர் மந்தர மலைவிலு வந்தவர்
கொடியா மேறுடையார்
கொழுமண மொன்றிய விதழ்பு னைந்தவர்
குளிர்நீ ரார்ச்சடையார்

தவமிகு மந்தண ரிதயம கிழ்ந்தவர்
தமியே னாடானார்
சபையி டைம்பல புரியரு ளங்கணர்
சமமீ றாதியிலார்

பவளநி றுங்கிளர் வடிவுகு புங்கவர்
பணியார் பாலணுகார்
பகைஞர் புரம்பொடி படநகு சங்கரர்
பரிவார் காதலியே

புவனது ரந்தரி மணிதிகழ் சுந்தரி
புதுநீ ராடுகவே
புதுவை நிரந்தரி திரிபுர சுந்தரி
புதுநீ ராடுகவே 2

மணமிகு மலர்த்தா தளைந்து தேனுண்டளி
கண்மகிழ் நறும்பூந் தார்க்குழல்
வரைநின் றுயர்ந்து வானெறி சென்றுமுன்
னீரைவா ரியுண்ணு மேகமெனவே

குணமுறு மணிகாச் சுவீகியா ரருள்முது
கொண்டோங் கிவளர வர்முலை
கொற்றத் துழாய மௌலிபண் பாற்கடலிற்
குறித்திட் டசயில மெனவே

வணரிருங் கன்னற் சிலைப்புரு வமைவிதி
வளைச்செவி பிறங்கு வதனம்
வண்மை திகழ்விண் மீன்கணஞ் சூழ்வுல
வுமுயல் மறுவற்ற மதியமெனவே

புணரிநி கர்பெரு வராகந் திகுலவதீ
புதியநீ ராடி யருளே
புகழ்மிகுங் கௌரிதி ரிபுரச வுந்தரிநீ
புதியநீ ராடி யருளே 3

செங்கய வொடுங்கண் கள்சைவல லொடுங்கூந்தல்
சேதாம் பன்மல ரொடும்வாய்
திருமுத் தொடுந்தந் தம்வள்ளை யொடும்வார்காது
செம்பவ ளமொடு மெல்லிதழ்ச்

சங்கமொ டுமிடறு தண்குமிழ் யொடுமலர்முலை
தாவிய கெளிற்றோ டும்விரல்
சலச்சுழி யொடுங்கொப் புள்கொடியொடு மருங்குநீள்
சர்ப்பப் படமொடு நிதம்ப

மங்கல வனோடு முழந்தா னுலவுசினை
வரால்தனோ டுந்திரள் கணைக்கா
லாமை யொடுநன் புறங்கால் கமலம
லரொடும வத்தகப்பத மாசெயப்

பொங்குதெண் டிரையே றிவராகமாந் திமருவு
புதியநீ ராடி யருளே
புகழ்மிகுங் கௌரிதி ரிபுரச வுந்தரிநீ
புதியநீ ராடி யருளே 4

இலங்கும ரகதம ணிச்சோ தியற்பசிய
நின்னெழி லுருச்சா யலைக்கண்
டேமுற் றுவாயால் மாறாது தோகை
மயிலின மாச்சோ லையடையக்

குலங்கொண் டுசூழா மடந்தை யரோடள
வளாயக் கூறிமொழி மழலைகண்டு
குயில்பசுங் கிளிபூ வைநாணி நீள்வாழைக்
கொழிங்குருத் திடையொ ளிக்க

நலங்கிளர் சிலம்புதன் டைகள்கொஞ் சிடுந்தெய்வ
நளினத் திருத்தா ளின்மென்
னடைகண் டுவெட்கி மெய்வெளிற் றன்னம்
பெட்டோ டுநடுங்கிப் பரந்துபாற்ப

பொலங்குவட் டருவிமுத் தெறிதிரை வாரகனதி
புதியநீ ராடி யருளே
புகழ்மிகுங் கௌரிதி ருபுரச வுந்தரிநீ
புதியநீ ராடி யருளே 5

ஏந்திதழ் முறுக்கவிழ்ந் தூறுதேன் பிலகு
வாரிச மென்றுமா முகமலர்ந்
தினநிலாக் கதிர்கண் டுவந்திடு கருங்குவ
ளையெனு மைக்கணார் நோக்கி

நீந்துதற் கரியபு னலிடையுல வுபல்பறவை
நீளோ தையா மின்சொலா
னித்திய கல்வியா ணபர தேவியே
வருகவென் நேயமுடனே யுபசரிதந்

துதிகள் செய்துவெண் ணித்தில்ச் சங்கங்க
றார்ந்தெழுந் தெறிதி ரையெனு
மம்பொன் மணித்தொடிக் காந்தட காங்கொண்
டழைத்துற வுபுரியு மெழிலார்

பூந்துறை குலாவிய வராகமாந் திமேவு
புதியநீ ராடி யருளே
புகழ்மிகுங் கௌரிதி ருபுரச வுந்தரிநீ
புதியநீ ராடி யருளே 6

காஞ்சனத் தொளியொடு பிறங்குமா ணிக்கக்
கலாபம் விரிசிகை பரும்மின்
காஞ்சிமா மேசலா பாணங் களம்பொற்
கலிங்க மீதரா வஞ்செய்

வாஞ்சா மணிப்பணி கள்கொங் கைக்கு
வட்டிழியும ருவியின சைந்தொலிக்க
வளவிட் டுரைத்திடற் கொவ்வாது யர்ந்த
மாத்தா டகத்தொடி களார்ப்ப

நாஞ்சொலிப்பணி யெவமணம் வீசுதே னொழுகு
நளினத் திருப்ப தத்தி
னகைமாந் தெழில்கொள் சில்லரி விளங்குந்
தண்டை நவமணிக் கிண்கிணியுடன்

பூஞ்சிலம் பொலிடவ ராகமாந் திபெருகு
புதியநீ ராடி யருளே
புகழ்மிகுங் கௌரிதி ரிபுரச நீவுந்தரிநீ
புதியநீ ராடி யருளே 7

கலைபல வும்பரி வுளர்மகிழ் பெறவருள்
கலைமீ னெனுஞ்சகியுங்
கனசெல் வம்பழ வடியாக் குதவுங்
கமலை யெனும்பெயர்கொள்

சிலைநுதல் குமுதச் செவ்விதழ் தெய்வச்
செடியும ணிமகுடத்
தேவர் களதிப திமேவிய பொற்புறு
சீரயி ராணியெனு

நிலைபெறு சிலதியு மரமகளிர் களெனு
நிறைமிகு மிகுளையரு
நீதியு டன்பொற் பாதந் தொழுது
பின்னின்றிரு புடைசூழ

வலையெறி பெண்ணைந் தித்துறை யினிதா
யாடுக புதுநீரே
யாரணி சிவபரி பூரணி திரிபுரை
யாடுக புதுநீரே 8

குமுதவி தழ்க்கரு மைக்கண ரம்பையர்
கோடாகோ டியர்பொற்
கொல்லணி யற்றும ணிச்சிவி றிக்கைக்
கொண்டொடு வர்க்கொருவர்

கமழ்தரு மதுவுமிழ் மலரோ தியினுங்
கலைமதி வதனத்துங்
கரமுறு முத்துவ டக்கொங் கையினுங்
கவனிடை யுடைமீது

மிமையள வுஞ்சலி யாதெதி ரெதிர்நின்றி
மிழ்நறு நீர்தூது
வெய்த்துச் சிலர்பின் னிட்டோ டுதல்கண்
டிளநகை தருமயிலே

யமிழ்தமி தெனவரு பெண்ணை நதித்துறை
யாடுக புதுநீரே
யாரணி சிவபுரி பூரணி திரிபுரை
யாடுக புதுநீரே 9

ஈரம லர்க்கா விற்பந் தாடியு
மின்னிசை பாடியுநல்
லெழில்கொண் மணிச்செய் குன்றுக டோறுமி
வர்ந்துல வியுமிக்க

சீரமை பொற்பா வைக்கும ணங்கள்
செழிப்புட னேசெய்துந்
தேமலர் கொய்துங் குரவை புரிந்துஞ்
சேடிய ரோடுகூடி

வாரமு டன்பொன் னம்மனை யாடியும்
வரிவளைக் கைகொட்டி
மகிழ்வொடு கொம்மை யடித்தும் நடித்தும்
வண்டல்செய் தருளுமையே

யாரநி றைந்திடு பெண்ணை நதித்துறை
யாடுக புதுநீரே
யாரணி சிவபரி பூரணி திரிபுரை
யாடுக புதுநீரே 10

## ஊசல் பருவம்

குழைபொலந் தருவினு லவரம் பைபாகன்
கூறெணா தநலமே
குலவும்விஞ் சையர்தமெ ழில்கொளங் கனையர்
கொதினா கவுலகார்

மழையினுங் கரியகு ழன்மடந் தையர்கள்
வாரிசூழ நிலமென
மருவியென் றுநிறை பெருகுமங் கையர்கள்
வாழிவா ழியெனவே

விழையுமன் பினோடு துதிசெயுங் கௌரீவீ
றுசேரி தழிபால்
விதிவொடும் பனகஞ் திமிலைந் தமுடி
வேணிமே வுமிறையோ

னுழையிலங் குமர கதமே யம்பிகை
பொன்னூசலா டியருளே
யுளமகிழ்ந் துதிரிபு ரசவுந் தரிபொன்
னூசலா டியருளே 1

நிருபர் களனுதி னமனுமு றையின்படி
நிடிரை மண்ணான
நிலைபுயன் மதிதொறு மினிது பொழிந்திட
நீர்மலி மும்மாரி

யிருநிதி நிரைபுனல் வயல்வள மெங்கணு
மேருற வெந்நாளும்
இருடிக டவநிலை பெறமிகு தொண்டர்க
ளேனுற மெய்ஞ்ஞான

மருவிய கலைவரை கவிதை புனைந்திட
மாமுதிர் சொன்னாடி
மகிதல மதிலக முறுநிறை பொங்கிட
வாழ்மயி லனனார்க

ளருமறை புகழ்புது வையினு றையம்பிகை
யாடுக பொன்னூசல்
அரகர சிவசிவ திரிபுர சுந்தரி
யாடுக பொன்னூசல் 2

ஓங்குவே தாந்தசித் தாந்தங் கணன்மாத்
துயர்ந்தபொற் றம்பங்களா
வோதரி யாநாதாந் தமேமொன் செழுங்கிரண
மொளிர்வயி ரவிட்டமாகப்

பாங்குபெறு மெய்ஞ்ஞான முயற்வெண் ணிலாக்கதிர்கள்
பாய்முற்று வடமதாகப்
பரவுதொண்டர் களிதையந ளினமலர் செஞ்சுடர்ப்
பதுமராகப் பலகையா

வாங்கலை மகட்செடி யருகிருந் தின்னிசை
களார்ந்தநின் புகழ்படிக்க
வம்புயத் திலகிலக் குமியெண் மருங்கையி
லட்டமங் கலமேந்திடப்

பூங்குழற் பசியமெய் ததிரிபுரா னந்தியே
பொன்னூசலா டியருளே
புதுவை வேதபுரீ சரிடமுலா வுபவானி
பொன்னூசலா டியருளே 3

கற்பகப் பூங்கா வனத்துந றுநிழலிற்
கடவுளர் வணங்கியேத்தக்
கனகா தனத்துவீற் றிடுவேந் தனாயிரங்
கண்மலர் களித்துநோக்க

நற்பது மாமலர்ப் பீடத் திருந்துலவை
நல்குந்திறத் தையுடையா
நான்குவ தனத்துவா யானுமெ முதாமரை
நவின்றுதி செய்துநிற்க

வற்புதம்பெறு முயிர்கன்யா வையும்பா
துகாத் தாழியிற் பள்ளிகொண்டோ
னானந் தமாகியா டுங்குடக் கூத்தினோடு
மகமிக மலர்ந்துவக்கப்

பொற்பில குதெய்வப் பொலன்றா வியன்னமே
பொன்னூசலா டியருளே
புதுவை வேதபுரீ சரிடமுலா வுபவானி
பொன்னூசலா டியருளே 4

கயலார் நறுஞ்சரவணப் பொய்கை தனில்வந்து
கார்த்திகைப் பாலருந்திக்
கருதுமுப் பத்துமுக் கோடிதெய் வச்சேனை
காவல னெனப்பொலிந்து

வயலார் தடங்கமலமு றைநான் முகன்றன்னை
வன்சிறைக் குகையிலிட்டு
மாமேருவிற் கையையன் செவிதனக்கிய மந்திர
முபதே சஞ்செய்து

செயலார் கொடுஞ்சூர பதுமனா தியபகைஞர்
சிதறவேற் படைவிடுத்துச்
செங்கடம் பணிவேயந் துமயிலூர்ந்து சேவற்
செயக்கொடி யுயர்த்துவக்கும்

புயலார் மலைக்கிழ வனைபெறற் குமரியே
பொன்னூசலா டியருளே
புதுவை வேதபுரீ சசரிடமுலா வுபவாணி
பொன்னூசலா டியருளே 5

வரையுறுங் கலவம யிலிநின் றருள்சு
வாமியாட மிகுசீர்
மருவுமுந் துருவினி பமுகன் றினமரு
மலாட வினிதா

தரையெயின் றமுகிலு வண்ணொண் பிடரி
தாவியா டவெழிலார்
சதுமுகன் பொருவில் சிறைவிகங் கமிசை
சால்பினா டமகவான்

னிரைதரங் கமெறிக டல்பயந் தகளிறே
றியாட விடைமே
லெவருமஞ் சலிசெய் திடவா மபுரியு
மீசனா டமறைநா

வுரைதரும் புதுவை வருதுரந் தரிபொன்
னூசலா டியருளே
யுளமகிழ்ந் துதிரிபு ரசவுந் தரிபொன்
னூசலா டியருளே 6

அலகிறுந் ததவமு னிவர்கண்
டுவகை யாடியோ துகதியே
யரசமுஞ் சரமுரி னிதுதந்
துபுவனா தியாய வொளியே

யிலகுவிஞ் சையா களனுதி
னம்புக ழுமீடிலா பரையே
யிகல்செயும் பழயவி னைகளங்
கவெளியெ னையா ளுமுமையே

சொல்லருஞ் சுருதிமு றையிடும்பசி
யசோதி நீடு மணியே
சுபநலம் பெருகுபு துவையின்
கண்வரு சூலிவா நிதியே

யுலகிறைஞ் சுபயப தநிரந்
தரிபொன் னூசலா டியருளே
யுளமகிழ்ந் துதிரிபு ரசவுந்
தரிபொன் னூசலா டியருளே 7

அமுதினு முதிர்சுவை தருமொழி மங்கலை
யாடுக பொன்னூச
லடியவ ரிடர்கெட வரமுத வும்பரை
யாடுக பொன்னூச
லமுதர் கள்பாவிய பதமல ரம்பிகை
யாடுக பொன்னூச
லபயவ ரதகர தலமுறு சங்கரி
யாடுக பொன்னூச
லமலை விமலை சிவைகௌரி யலங்கரி
யாடுக பொன்னூச
லருள்செய் தெனதுது திமகிழ நிரந்தரி
யாடுக பொன்னூச
லமலனொ டுவிடை யினிலகு துரந்தரி
யாடுக பொன்னூச
லரகர சிவசிவ திரிபுர சுந்தரி
யாடுக பொன்னூசல் 8

மட்டுல வுநறுமலர்த் தாமரைச் சிற்றடியின்
மன்னுகிண் கிணியசையவே
மதுரச் செழுங்கரும் பனையதோன் வலையமொடு
வச்சிரத் தொடி யசையவே

இடமடைச் செம்பொற் படர்த்தோ டுமணிச்
சுடரிமைக்குமே கலையசையவே
யிளவெயி லெறித்திடு மணிப்பிறை வடத்திலே
டெகாரமொத் தசையவே

கட்டுறு மணிக்கச் சிலங்குத னமீதுதண்
கதிர்முத்து வடமசையவே
கவினொழு குசெவியி லணிமா மணித்தொங்க
கமழ்குழற்றொடை யசையவே

பொட்டில குசிலை துதற்சுய் முன்னசைய
பொன்னூசலா டியருளே
புதுவை வேதபுரீ சரிடமுலா வுபவானி
பொன்னூசலா டியருளே 9

மலிவுற் றுசெந்தமிழ்ப் பாண்டிநாட் டுயரால
வாயினுஞ்சீர் கிரியினும்
வானோங் குகாலை யினும்ருணா சலத்தினும்
வாரணாசித் தலத்தும்

நலிவுற் றிடாதசீ காழியி னுமையாற்று
நவலசிதா காயத்தினும்
நாகையினு மாரூரினுங் காஞ்சி தன்னினு
நள்ளாற்று மருதூரினு

மெலிவுற் றதொண்டரைக் கரையேற் றுமூரினும்
வெஞ்நிறுஞ் சிறந்த
வில்லையம் பதியினுங் காளத்தி தன்னினு
மேவுமற்றுள தலத்தும்

பொலிவுற் றமாந்தகு ஞுமொருபெ ருந்தேவியே
பொன்னூசலா டியருளே
புதுவை வேதபுரீ சரிடமுலா வுபவானி
பொன்னூசலா டியருளே

— **வேலு மயிலுந் துணை**

# பாயிரம்

## தாண்டவராயக் கவிராசா

### வெண்பா

ஒப்பின முதலவிக்கு வப்புற முத்துக்கும
ரப்பன் சொனமுற்பிர பந்தத்தை -நப்பெருந்த
கைத்தமி ழென்பர் கலைஞரிஃ தும்பிள்
ளைத்தமி ழென்பர லர்

### கலித்துறை

வெள்ளச் சடாடவி வேதபு ரீசனை மேவிவளர்
கிள்ளைத் திருபுர சுந்தரி மீதுகிளர் புதுவை
வள்ளற் குணாலையன் முத்துக்குமா ரவரோ கையன்சொற்
பிள்ளைத் தமிழை முதலித் தமிழெனப் பேசுவாரே

## இராமச்சந்திரக் கவிராயர்

உண்ணா துசுரந் தபெருந் தனத்தமுதந்
தமிழ்பா டவொருவற் கீந்தாள
பண்ணார் முத்துக் குமரவேள் செய
பிள்ளைத் தமிழமுதம் பரிந்துகொண்டாள்
தண்ணார் வெண்மதி தவழும ணிமாடத்
தென்புது வைத்தன் னின்மேவு
கண்ணா னதிரிபு ரைக்கிங் கெதில்விருப்பம்
புலவோ றேகழ றுவீரே

## அருணாசல உபாத்தியார்

### கலித்துறை

சத்துக் குணத்தருள் வேதபு ரீசர்தம திடப்பாற்
சுத்தக் குலத்தவர் போற்றுந் திரிபுர சுந்தரிமேற்
பத்திக் கணியிதெ னப்பாவலர் சொல்ப்பண் டமிழ்தேர்
முத்துக் குமாரன் முதுற்பிற பந்தமொழிந் தனனே

## இராமானுசக் கவிராயர்

வித்துக்கு முன்பதுவை வேதபுரீசர் மனைமேன்
முத்துக்கு மாரன்மொழிந் ததுதான் -வித்தைக்குள்
வெள்ளத் தமிழர் விரிஞ்சன் னிதேரும்
பிள்ளைத் தமிழெனவே பேசு

## கூனிபோகு ராமசாமி

## வெண்பா

முத்துக் குமாரதன றுழுதறிஞன் வேதபுரி
யத்தற் கிடம்மாந் தவம்மைக்குப் - புத்தமுதாம்
பிள்ளைத் தமிழுரைத்தபெற் றியையென் சொல்லுகேன்
வெள்ளத் தமியேன் விரித்து

## வீராசாமி முதலியார்

கற்கண்டைச் சருக்கரையைப் பாகைத் தேனைக்
கதலிபலா மாவெனுமுக் கனியை வென்ற
சொற்கொண் டவொருபிள் ளைத்தமி ழையன்பாற்
சூட்டினான் புதுவை திரிபுரைக் குமேரு
விற்கொண்ட பரமனருள் பெற்று வாழும்
விற்பன் னமுத்துக் குமரவே ளின்சீர்த்தி
யெற்கொண் டுமோசொ லத்தான் சேடனாலு
மிசையாமற் றலையசைத் தானென் னுங்காலை

# செய்யுள் அகரவரிசை


அ

அங்கணு லகோங்கிலங்
அம்பைப் பொருதஞ்
அமுதின முதிர்சுவை
அரனிடத் தவன்வரு
அரிபுரந்தா யனமுத
அருமறை களாகம்
அலகிறுந் ததவமு
அளிகுல வுங்கடந்

இ

இலங்கும ரகதம
இலைகொண றும்பூந்தில்

ஈ

ஈரம லர்க்கா

உ

உரைபெறு தவமுய
உன்னே யுயிரே

எ

எலமுறு பூங்குழற்
எழுபசும் புரவியீர்க்
எழுவகை யுற்பவ

ஏ

ஏந்திகழ் முறுக்கவிழ்ந்

க

கதிர்செய்மணி முடிவேந் துசி
கதிரவன் றனதுவே
கமகம வெனமண
கமலமலர் வீட்டுலவு
கயலார் நறுஞ்சரவணப்
கயற்கொண் டதிசை
கலைபல வும்பரி
கற்பகப் பூங்கா
கணகொலை வஞ்சகா
காஞ்சனத் தொளியொடு
குமுதவி தழ்க்கரு
குயம்முத லட்டாங்
குலமணி திகழ்பொற்
குலவுசெ முங்குங்
குவடுயர் மந்தர
குழைபொலந் தருவினு

ச

சதுமுகன் றிருமக
செங்கய வொடுங்கண்

த

தங்கம கமேருவெ
தண்டாள மணியுயர்த்
தளவத் தினமுகை
தாரணி தனிலெதிர்
திருமரு வுதம்பிரான்
திருவல வன்புரி

து

துங்கமிகு செம்மணி
துதியரான திலங்குகலை

ந

நம்பியிவற் பக்கநீ
நதிபதிகள திமகிமை
நவமிகு தெண்பனி
நவமேவு புவனியிற்
நவமே வுக்குணையுடன்
நற்றமை பெருமஞ்
நன்மை திகழெல்லை
நான்குதிக் குந்தலை
நனாக லைவவல்
நிலவுதரு வெண்முத்து

நிருபர் களனுதி
நிறைமதி யெனப் பெயர்
நீர்கொண்ட
வேணிப்பிரான்
நேசமி குநற்றொண்

ப

பங்கை யச்சொல்
பதுமகா பன்சோ
பந்தபா சத்தொட
பருவமுங் குலபெய்
பழைய வேதங்கா
புலமை மிகுங்கவி
பூமங் கையும்
பூவணி புபூகுச
பைவைத்த மணிமுடி
பொன்பயின் றுந்தாது
பொன்புற மிலங்குநெ

ம

மஞ்சுகுடி கொண்டதகாங்
மஞ்சக மகுகளி
மடடுல வுநறுமலர்த்
மண்டிய கவள்கடி
மணமிகு மலர்த்தா
மகபதி மணந்தம
மகபதி மணந்தம
மகபதி பெறுந்தநய
மத்தகெ கத்தை
மருவகு ளந்தந்
மறைவில்வே லாழிபடை
மலிவுற் றுசெந்தமிழ்ப்
மழைத்துளி யுகுத்தார்த்
முச்சிகாப் படையைக்
முத்தலைச் சூலமேந்
முந்தெழுத் தாய்பொற்
முன்னகைத் திகலரு
மூவரெ னுந்தரு
மெலிமை யோர்கள்உ
மேனிலத் தமரர்முனி
மைதவமு மணிநெருஞ்

வ

வண்ணங் கரியமா
வண்ணமி கும்ங்
வரையுறுங் கலவம
வல்விற்றடக் கைவிராதி
வானவர்பார் வுபுருகூ
வானூரப திதவமு
விகடமி குதனுகடக
விடங்கொழிக் குந்துளையே
விண்டலஞ் செவிகுற
வெண்டாமரைச்
செல்வியோ
வேதியர் மாமுனி

J.7222
J.7222